Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

SATURDAY, NOVEMBER 6, 2021

சனிக்கிழமை நவம்பர் 06, 2021 | ஒளி: 07 கதிர்: 146 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | Free

## பொது இடங்களில் தடுப்பூசி அட்டை கட்டாயம்?

### ஆராயப்படுவதாக இராணுவத் தளபதி அறிவிப்பு

பொது இடங்களுக்குச் செல்லும் மக்களுக்கு தடுப்பூசி அட்டைகளை கட்டாயமாக்குவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு வருவதாக இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா தெரிவித்தார்.

கொவிட் பணிக்குழுவின் அடுத்த கூட்டத்தில் இது குறித்த தீர்மானம் எடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பில் இன்னும் கலந்துரையாடப்பட்டு வருவதாகவும், சுமார் 6 சதவீதமானோருக்கு இரண்டாவது டோஸ் இன்னும் வழங்கப்படாத நிலையில், இவ்வாறான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது பொருத்தமானதல்ல என சிலர் கருத்து தெரிவித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

இலங்கையில்

# சீன இராணுவ தளம்

### சீனா பரிசீலிப்பதாக பென்டகன் அறிக்கை



இலங்கையில் இராணுவத் தளம் அமைப்பது தொடர்பில் சீனா பரிசீலித்து வருவதாக அமெரிக்காவின் பாதுகாப்புத் தலைமையகமான பென்டகன் அறிக்கை வெளியிட்டுள்ளது.

'சீன மக்கள் குடியரசை உள்ளடக்கிய இராணுவம் மற்றும் பாதுகாப்பு அபிவிருத்திகள்' என்ற தலைப்பில், பென்டகன், நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்குறிப்பிட்ட விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதிக தொலைவில் தமது இராணுவ பலத்தை நிலைநிறுத்த சீனா முயல்வதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், இலங்கை உட்பட 13 நாடுகளில் இராணுவ தளங்கள் அல்லது இராணுவத் தளவாட வசதிகளை நிறுவுவது குறித்து

தொடர்ச்சி P2





## வரவேற்பு

இரண்டு வருடங்களுக்குப் பின்னர், சுவிட்சர்லாந்தின் சூரிச் நகரிலிருந்து வந்த விமானம், கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை காலை 7.45 மணிக்கு வந்தடைந்தது. நீர்த்தாரை வணக்கத்துடன், விமானம் வரவேற்கப்பட்டதுடன், விருந்தினர்களுக்கும் அமோக வரவேற்பளிக்கப்பட்டது.

சொகுசு ஜீப் கரணமடித்து விபத்து

## தந்தைக்கும் 16 வயது மகனுக்கும் விளக்கமறியல்

சொகுசு ஜீப் வண்டியை செலுத்தி மரண விபத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட 16 வயது சிறுவன் மற்றும் அவரது தந்தை ஆகியோரை எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, வத்தளை நீதவான் ஹேஷான் டி மெல், நேற்று (05) உத்தரவிட்டார்.

அவர் பி.எச்.எம். அப்துல்லா மற்றும் அவருடைய 16 வயது மகன் ஆகியோரையே மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கொழும்பு - நீர்கொழும்பு பிரதான வீதியில் நேற்று முன்தினம் (04) காலை 9 மணியளவில் இடம்பெற்ற வாகன



விபத்தில் ஒருவர் உயிரிழந்துடன், ஐவர் காயமடைந்திருந்தனர்.

கொழும்பில் இருந்து நீர்கொழும்பு நோக்கி பயணித்த சொகுசு ஜீப் ஒன்று

தொடர்ச்சி P2

எதிர்வரும் நாள்களில்

## சவால்கள் அதிகரிக்கும்



மக்களின் நாளாந்த வாழ்க்கை, இயல்பு நிலைக்கு திரும்பி வருகின்ற நிலையில், கொரோனா தொற்று பரவுவதைக் குறைந்த மட்டத்தில் பேணும் பொறுப்பு, பொது மக்களுக்கும் சுகாதார தரப்பினருக்கும் உள்ளது என்று சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகமும் விசேட வைத்திய நிபுணருமான வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

எண்ணிக்கையை அடிப்படையாக கொண்டு பார்க்கும் போது, சில அதிகரிப்புகள் காணப்படுகின்றன. கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட காலப்பகுதியில் கொரோனா தொற்றாளர்களின்

தொடர்ச்சி P2

அரசாங்கத்தின் மீது

## முழுச் சமூகமும் நம்பிக்கை இழப்பு



இளைஞர்கள் உட்பட முழுச் சமூகமும் அரசாங்கத்தின் மீது வைத்திருந்த நம்பிக்கை முற்றாக வீழ்ச்சியடைந்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.

இன்றைய நாள்களில் வீதிகளில் காணப்படும் நீண்ட வரிசைகள் இதற்கு சிறந்த உதாரணம் என பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (05) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்ட விடயங்களை தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

அகழ்வாய்வுப் பணிகளின் போது

## தமிழரின் கலாசார ஆதாரங்களை பாதுகாக்கவும்

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழ் மக்களின் தொல்லியல் சின்னங்களையும் பண்பாட்டு விழுமியங்களையும் பாதுகாக்கும் வகையில் அகழ்வாய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவுக்கும் கடற்றொழில்



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இடையில் நேற்று (05) இடம்பெற்ற

தொடர்ச்சி P2

பசிலுக்கு எதிரான வழக்கு

## சட்டமா அதிபரின் நிலைப்பாடு நவ.11இல்



நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ உள்ளிட்ட இருவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள நாட்குறிப்பு வழக்கை தொடர்ந்து நடத்துவதா, இல்லையா என்ற நிலைப்பாட்டை எதிர்வரும் நவம்பர் 11ஆம் திகதி அறிவிக்கவுள்ளதாக சட்டமா அதிபர், கொழும்பு மேல் நீதிமன்றத்துக்கு, நேற்று (05) அறிவித்தார்.

தொடர்ச்சி P2

ஜனநாயக விரோத சக்திகளுடன் கலந்துரையாடி

## மீண்டும் தலைகுனிவை ஏற்படுத்தப் போகிறீர்களா?

### மனோ, ரவூப் ஆகியோரிடம் சங்கரி கேள்வி

கனகராசா சரவணன்



ஜனநாயக விரோத சக்திகளுடன் கலந்துரையாடி மீண்டும் மீண்டும் தமிழ் மக்களுக்கு தலைகுனிவை ஏற்படுத்தப் போகின்றீர்களா? இவ்வாறானவர்களிடம் கலந்துரையாடுவது என்பது பாராளுமன்ற உறுப்பினர்களான ரவூப் ஹக்கீம், மனோ கணேசன் ஆகிய உங்களுக்கு பெரும் தர்மசங்கடத்தை ஏற்படுத்தவில்லையா என தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி கேள்வி எழுப்பியுள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி பாராளுமன்ற உறுப்பினர்களான ரவூப் ஹக்கீம், மனோ கணேசன் ஆகியோருக்கு நேற்று

தொடர்ச்சி P2



பயணப் பை சடலம்

## அடையாளம் காணப்பட்டது

சப்புகஸ்கந்த, மாபிம வீதியின் எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்துக்கு அருகிலுள்ள, கழிவுகளுக்கு மத்தியில் பயணப் பொதி ஒன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட பெண், அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவ்வாறு அடையாளம் காணப்பட்டவர் மாளிகாவத்த தொடர்மாடி குடியிருப்பு பகுதியில் வசிக்கும் 44 வயதான மொஹமட் ஷாபிக் பாத்திமா என பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

## ஆசிரியர்களின் போராட்டம் நியாயமானது

### பெற்றோரும் சேர்ந்துள்ளமைக்கு ராதா பாராட்டு



டி.ஷங்கீதன்

ஆசிரியர்கள் கடந்த பல நாள்களாக தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்ற போராட்டம் நியாயமானது என்று தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் வீ. இராதாகிருஷ்ணன், இலங்கையில் இருக்கின்ற அனைத்து தரப்பினரும் போராட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்கி அவர்களுடைய நியாயமான சம்பளத்தை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்றார்.

தொடர்ச்சி P2

## திங்கள் முதல் கடுகதி ரயில் சேவைகள்



நகரங்களுக்கு இடையிலான கடுகதி ரயில் சேவைகள், எதிர்வரும் திங்கட்கிழமை (08) முதல் ஆரம்பிக்கப்படும் என ரயில்வே பொது முகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர தெரிவித்தார்.

இரவு தபால் ரயிலை இயக்குவது மற்றும் இரவு 7.00 மணிக்குப் பின்னர், வழக்கமான கால அட்டவணையில் ரயில்களை இயக்குவது தொடர்பில் விவாதித்த பின்னர் எதிர்காலத்தில் திட்டங்கள் வரையப்படும் என்றார்.

கொரோனா பரவலைக் கட்டுப்படுத்தும் வகையில் அமல்படுத்தப்பட்டிருந்த மாகாணங்களுக்கு இடையேயான பயணத் தடை நவம்பர் 1ஆம் திகதி முதல் நீக்கப்பட்டதையடுத்து, அலுவலக ரயில்கள் மட்டுமே இயக்கப்படுகின்றன.

எனினும், இரவு 7.00 மணிக்குப் பின்னர், நீண்ட தூர மற்றும்

தொடர்ச்சி P2

முத்துராஜவெல சதுப்பு நில விவகாரம்

## காவிந்த எம்.பியும் மீனவரும் மனுத்தாக்கல்

முத்துராஜவெல சதுப்பு நிலத்தை சுவீகரிப்பதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு அனுமதியளித்து வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் சட்டபூர்வ தன்மையை சவாலுக்குட்படுத்தி, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# சீன இராணுவ தளம்

சீனா பரிசீலித்திருக்கலாம் என்றும் குறிப்பிட்டுள்ளது.

சிங்கப்பூர், பாகிஸ்தான், மியன்மார், ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் தாய்லாந்து ஆகியவை அறிக்கையில் பட்டியலிடப்பட்டுள்ள பிற நாடுகளில் அடங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சீனா தனது கடற்படை, விமானப்படை மற்றும் தரைப்படைகளின் வலிமையை அதிகரிக்க இந்த வசதிகளை நிறுவ பரிசீலித்து வருவதாக பென்டகன் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தந்தைக்கும் 16 வயது மகனுக்கும் விளக்கமறியல்

வெலிசறை மயானத்துக்கு அருகில் வீதியை விட்டு விலகி, எதிர்த்திசையில் பயணித்த இரு மோட்டார் சைக்கிள்கள், ஓட்டோ, கார் என்பவற்றுடன் மோதியே விபத்துக்குள்ளாகியது.

சொகுசு ஜீப்பை செலுத்தியவர் 16 வயதான சிறுவன் என்று கண்டறியப்பட்டதுடன், அவரும் அவருடைய தந்தையும் அன்றைய தினமே கைது செய்யப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழரின் கலாசார ஆதாரங்களை பாதுகாக்கவும்

சிநேகபூர்வ சந்திப்பின் போதே மேற்குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடற்றொழில் அமைச்சரின் யாழ் அலுவலகத்தில் இடம்பெற்ற குறித்த சந்திப்பில் தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

“எமது பாரம்பரிய தமிழர் வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாத்து, பராமரிக்கும் செயற்பாடுகளைத் சரியாக திட்டமிடல், அருங்காட்சியகங்களிலுள்ள கலைப் பொருட்களுக்கான பாதுகாப்பினை உறுதிப்படுத்தல் மற்றும் தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் முறையான அகழ்வாய்வு பணிகளை நடைமுறைப்படுத்த வேண்டும்.

இதன்மூலம், தமிழர் கலாச்சார வரலாற்று ஆதாரங்களைப் பாதுகாத்தல் போன்ற எமது மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில் தொல்லியல் திணைக்களம் மற்றும் தொல்லியல்சார் அமைச்சின் செயற்பாடுகள் அமைய வேண்டும்” என்று தெரிவித்துள்ளார்.

# அடையாளம் காணப்பட்டது

இரண்டு பிள்ளைகளின் தாயான குறித்த பெண் ஒக்டோபர் மாதம் 28ஆம் திகதியிலிருந்து காணாமல் போயுள்ளார் என்றும் இந்த நிலையில், ராகம வைத்தியசாலைக்கு வருகைத் தந்த அவரது கணவனால், சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கை,கால்கள் கட்டப்பட்ட நிலையில், பயணப் பொதி ஒன்றிலிருந்து, நேற்று முன்தினம் (04) மாலை சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

வீதியோரத்தில் கழிவுகள் சேகரிக்கப்பட்டிருந்த இடத்திலேயே இந்த பொதி கண்டுபிடிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# திங்கள் முதல் கடுகதி ரயில் சேவைகள்

குறுகிய தூர ரயில் சேவைகள் வழமைபோல் இடம்பெறவில்லை.

தற்போதைய முறைப்படி, பயணிகளின் தேவைக்கேற்ப இரவு 7.00 மணிக்கு பின்னர் ரயில்கள் இயக்கப்படும் என்றார்.



### கைகலப்பை விலக்கச் சென்ற

# மூன்று பிள்ளைகளின் தாய் பலி

எஸ்.கணேசன்

வட்டவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வட்டவளை மவுன்ஜீன் தோட்டத்தில், மூன்று பிள்ளைகளின் தாயொருவர் பொல்லால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார் என்றும் சந்தேகத்தின் பேரில் இளைஞர் ஒருவரைக் கைது செய்துள்ளதாகவும் வட்டவளை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் (04) இரவு 8 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மூன்று பிள்ளைகளின் தாயான சந்திரசேகரன் கலாதேவி (வயது 57) என்பவரே உயிரிழந்துள்ளார்.

தனது குடும்பத்துக்கும் அயல் குடும்பத்துக்கும் இடையே ஏற்பட்ட கைகலப்பை விலக்குவதற்கு சென்ற போதே இவ்வாறு பொல்லால் தாக்கப்பட்டு அவர் மரணமடைந்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்த வட்டவளை பொலிஸார், உயிரிழந்த பெண்ணின் சடலம் வட்டவளை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

ஹட்டன் நீதவானின் மரண விசாரணைகளின் பின்னர், உறவினர்களிடம் சடலம் ஒப்படைக்கப்படும் எனவும் கைது செய்யப்பட்ட சந்தேகநபரை ஹட்டன் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் ஹட்டன் தடயவியல் பிரிவு மற்றும் வட்டவளை பொலிஸார் இணைந்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சவால்கள் அதிகரிக்கும்

எண்ணிக்கை குறைவடைந்திருந்தது என்றார்.

பின்னர் நாடு திறக்கப்பட்டதும் அந்த நிலைமை மாறியுள்ளதாகவும் அந்த நிலைமை தொடருமானால் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்றும் எச்சரித்தார்.

சுகாதார வழிமுறைகள் பேணப்படாவிடின் இந்த நிலைமை மேலும் அதிகரிக்கும் அபாயம் காணப்படுகின்றது என தெரிவித்த அவர், எமக்கு சில நிழற்படங்கள் கிடைத்துள்ளன. அதாவது வைத்தியர்கள் உள்ளிட்ட சுகாதார ஊழியர்கள் சுற்றுலாப் பயணங்களை மேற்கொண்டு, முகக் கசவமின்றி புகைப்படம் பிடித்துள்ள படங்கள் எமக்கு கிடைத்துள்ளன. இது மிகவும் வேதனைக்குரிய விடயம் என்றார்.

சுகாதார ஊழியர்கள் என்ற வகையில் ஏனையோருக்கு முன்னுதாரணமாக செயற்பட வேண்டும். அனைத்து நேரங்களிலும் முகக் கவசங்களை அணிந்து, சமூக இடைவெளியைப் பேணுவது சுகாதாரப் பிரிவினருக்கு மாத்திரமல்ல. அனைவருக்கும் பொருந்தும் என்றார்.

எனவே அனைவரும் ஒன்றிணைந்து தொற்றை ஒழிக்கும் செயற்பாடுகளை முன்னெடுக்காவிட்டால், எதிர்வரும் நாள்களில் மேலும் பல சவால்களை எதிர்கொள்ள நேரிடும் என எச்சரிக்கை விடுத்தார்.

# சட்டமா அதிபரின் நிலைப்பாடு நவ.11இல்

கடந்த ஜனாதிபதி தேர்தல் காலப்பகுதியில், அப்போதைய ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ஷவின் உருவப்படம் பொறிக்கப்பட்ட 5 மில்லியன் நாட்குறிப்பை திவிநெகும திணைக்களத்தினூடாக அச்சிட்டு, அரசுக்கு 29.4 மில்லியன் ரூபாய் நஷ்டத்தை ஏற்படுத்தினர் என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

இந்த வழக்கை தொடர்வது தொடர்பான சட்டமா அதிபரின் நிலைப்பாட்டை எதிர்வரும் நவம்பர் 11ஆம் திகதி நீதிமன்றத்துக்கு அறிவிக்கவுள்ளதாக சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ், உயர் நீதிமன்ற நீதிபதி தமித் தோட்டவத்தவின் கவனத்துக்குக் கொண்டுவந்தார். அதன்படி, முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ உள்ளிட்ட இருவருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட குறித்த வழக்கு எதிர்வரும் நவம்பர் மாதம் 11 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

2014 நவம்பர் 23 முதல் டிசெம்பர் 31 வரை இந்த நாட்குறிப்புகளை அச்சடித்ததன் மூலம் ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு வாக்களிக்குமாறு இந்த நாட்டின் குடிமக்களை செல்வாக்கு செலுத்த இந்த குற்றம் சாட்டப்பட்டவர்கள் முயற்சித்ததாக சட்டமா அதிபர் குற்றம் சுமத்தியிருந்தார்.

இந்த வழக்கில் முன்னாள் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய உள்ளிட்ட 32 பேரை சாட்சிகளாக சட்டமா அதிபர் பட்டியலிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# காவிந்த எம்.பியும் மீனவரும் மனுத்தாக்கல்

ஜயவர்தன மற்றும் நீர்கொழும்பு மீனவர் ஆகியோர், உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமைகள் மீறல் மனுவை, நேற்று (05) தாக்கல் செய்தனர். மனுதாரர்கள், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ, நகர அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் நாலக கொடஹேவா, நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் சிலரைப் பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டுள்ளனர்.

மூத்துராஜவெல சுற்றாடல் உணர்திறன் வலயத்தைப் பாதுகாப்பதற்கும் நிலையான பயன்பாட்டுக்கும் அபிவிருத்தி செய்வதற்கும் மூத்துராஜவெல சதுர்ப்பு நிலங்கள் அவசரமாகத் தேவைப்படுவதாக 2021.10.07 ஆம் திகதி வர்த்தமானி இலக்கம் 2248/44 இல் வெளியிடப்பட்ட உத்தரவுக்கு அமைய ஜனாதிபதி தன்னிச்சையாகச் செயற்பட்டதாக மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர்.

கம்பஹா மாவட்டத்தின் நீர்கொழும்பு பிரதேச செயலகப் பிரிவில் உள்ள பதினைந்து கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கிய பகுதிகளில் வசிப்பவர்கள் மற்றும் மனுதாரர்களின் உரிமைகளுக்கு வர்த்தமானி அறிவித்தல் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என மனுதாரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். ஜனாதிபதியினால் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலின் காரணமாக பிரதேசவாசிகளின் அன்றாட நடவடிக்கைகளுக்கும், சமய நடவடிக்கைகளுக்கும் தடை விதிக்கப்படும் என தெரிவித்துள்ள மனுதாரர்கள், இப்பகுதி மக்கள் பெரும்பாலும் மீன்பிடி நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளனர் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

# பொது இடங்களில் தடுப்பூசி அட்டை கட்டாயம்?

தடுப்பூசி அட்டைகளை கட்டாயமாக்குவது குறித்து பல்வேறு கருத்துகள் நிலவுவதாகவும் சுட்டிக்காடடினர்.

இதேவேளை, ஐரோப்பிய நாடுகளில் பொது இடங்களுக்கு தடுப்பூசி அட்டை கொண்டு செல்லப்படுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, அதனை இலங்கையிலும் நடை முறைப்படுத்துவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுவருவதாகக் கூறியுள்ளமை குறிப்பிட்டத்தக்கது.

# முழுச் சமூகமும் நம்பிக்கை இழப்பு

அத்தியாவசியப் பொருட்களுக்கான வரிசையை விட நாட்டை விட்டு வெளியேறத் தயாராக இருக்கும் இளைஞர்களின் வரிசை நீண்டதாகக் காணப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

உணவுப் பொருட்களின் விலையேற்றத்தினால் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் குறிப்பிட்டார்.

# மீண்டும் தலைகுனிவை ஏற்படுத்தப் போகிறீர்களா?

(05) எழுதிய பகிரங்க மடலிலேயே இவ்விடயத்தைத் குறிப்பிட்டுள்ளார்.

சமீபத்தில் தமிழ் கட்சிகளின் கலந்துரையாடலில் தாங்கள் இருவரும் கலந்து கொண்டு தெரிவித்த கருத்துகளை வரவேற்கின்றேன்.

தமிழ், முஸ்லிம் உறவுகள் ஒன்றிணைந்து பலமான அமைப்பாக உருவாக வேண்டும் என்ற தங்கள் இருவரின் கருத்துக்களும் காலத்தின் தேவை என்பதை தமிழர் விடுதலைக் கூட்டணி நன்கு உணர்ந்துள்ளது. தங்களின் முயற்சி வெற்றி பெற வேண்டும் என நான் வாழ்த்துகிறேன்.

2004ஆம் ஆண்டு தேர்தல் ஜனநாயகத்தை முற்றுமுழுதாக குழிதோண்டிப்புதைத்துவிட்டு விடுதலைப் புலிகளின் முழு ஒத்துழைப்புடனும், ஆசியுடனும் தேர்தலில் களமிறங்கி வாக்குச்சாவடிகளில் அவர்களின் ஆதரவாளர்களும் விடுதலைப் புலிகளும் நடந்து கொண்டவிதம் உலகத் தமிழர்களையே வெட்கித்தலைகுனிய வைத்தது என்பதை எவ்வாறு மறந்தீர்கள்?

அதுமட்டுமல்ல 2009ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தில் விடுதலைப் புலிகளும் தமிழ் மக்களும் அழிவதை வேடிக்கை பார்த்துவிட்டு இன்று மனித உரிமைகள் பற்றிப் பேசுகிறார்கள். 2015ஆம் ஆண்டு நீங்கள் சேர்ந்து ஆதரவு கொடுத்த நல்லாட்சி அரசாங்கத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பதவி சுகத்தை அனுபவித்துக் கொண்டிருந்தார்கள்.

அப்போது சிறுபான்மை மக்களின் பிரச்சனைகள் பற்றி ஏன் பேசி ஒரு முடிவுக்கு வரவில்லை. பிரச்சினைகளை தீர்த்து வைக்கக் கூடிய ஒரு சந்தர்ப்பம் இருந்தும் கண்டும் காணாமல் விட்டு விட்டு இப்போது மட்டும் எங்கிருந்து ஞானம் வந்தது.

இவ்வாறானவர்களிடம் கலந்துரையாடுவது என்பது உங்களுக்கு பெரும் தர்மசங்கடத்தை ஏற்படுத்தவில்லையா, ஜனநாயக விரோத சக்திகளுடன் கலந்துரையாடி மீண்டும் மீண்டும் தமிழ் மக்களுக்கு தலைகுனிவை ஏற்படுத்தப் போகின்றீர்களா என அந்த மடலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# ஆசிரியர்களின் போராட்டம் நியாயமானது

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

இந்த போராட்டமானது நியாயமானது, அவர்களுடைய உரிமைசார்ந்த ஒரு போராட்டமாகவே இதனை நான் பார்க்கின்றேன். என்னுடைய அரசியல் வாழ்வில் 75 சதவீதமான பகுதியை கல்விக்காகவும் மாணவர்களின் முன்னேற்றத்துக்காகவும் ஆசிரியர்களின் நலன் சார்ந்த விடயங்களுக்காகவுமே அர்ப்பணித்திருக்கின்றேன்.

இந்தத் துறையை சார்ந்த அதிகமான விடயங்களை அறிந்தவன் என்ற வகையிலும் இந்த போராட்டம் நியாயமானதாகவே இருக்கின்றது.

அரசாங்கம் இந்த விடயத்தை ஒரு முக்கிய விடயமாக கருத்தில் கொண்டு அவர்களுக்கான நிரந்தரமான ஒரு தீர்வை பெற்றுக் கொடுக்க முன்வர வேண்டும். ஆசிரியர்களுக்கு ஆதரவாக பெற்றோர்களும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமையை நான் வரவேற்கின்றேன்.

ஆனால் இந்த போராட்டத்தை வலுவிழக்க செய்வதற்காக ஒரு சில ஆளும் தரப்பு அரசியல்வாதிகள், தங்களுடைய பலத்தை காண்பித்தும் அச்சுறுத்தியும் இந்த போராட்டத்தை சீரழிப்பதற்கு முயற்சி செய்வதை செய்திகளின் மூலமாக அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

இது முற்றிலும் தவறான கண்டிக்கத்தக்க விடயமாகும். எந்த ஒரு ஜனநாயக போராட்டத்தையும் குழப்புவதற்கோ வலுவிலக்க செய்வதற்கோ யாருக்கும் உரிமை கிடையாது.

இது ஒரு ஜனநாயக நாடு அந்த அடிப்படையில் யாரும் தங்களுடைய உரிமைகளுக்காக போராட்ட செய்ய முடியம். அதற்கு அரசாங்கம் செவிமடுத்து உரிய தீர்வை பெற்றுக் கொடுக்க வேண்டுமே தவிர அதனை குழப்பியடித்து, தொழிற்சங்கங்களின் ஒற்றுமையை சீர்குலைத்து அதில் குளிர் காய நினைப்பது முதுகெலும்பில்லாத பிரச்சினைகளை சந்திக்க முடியாது சிறு பிள்ளைத்தனமான ஒரு செயற்பாடாகவே கருத வேண்டியுள்ளது.

மலையக மக்கள் முன்னணியும் மலையக தொழிலாளர் முன்னணியும் முழுமையான ஆதரவை வழங்கும் என்றும் ஆசிரியர்களின் இந்த போராட்டத்துக்கு வலு சேர்ப்பதற்காக நாங்கள் எந்த நேரத்திலும் தமிழ் முற்போக்கு கூட்டணியாக இணைந்து செயற்படுவதற்கு தயாராகவே இருக்கின்றோம் என்றும் தெரிவித்தார்.

# எவரும் கண்டு கொள்ளாத ஆணைக்குழுக்கள்

ரஜித் கீர்த்தி தென்னகோன்

வீட்டில் வளர்க்கப்படும் மாட்டின் முதுகில், சூடு குத்தப்பட்டு அதனை நடமாடவிட்டதன் பின்னர் எவரும் அதனை கண்டு கொள்வதில்லை. அது சுதந்திரமாக நடமாடித் திரியும். நமது தோட்டத்துக்குள் நுழைந்து பயிர்களை மேய்ந்தமைக்காக, அதற்கு எதிராக எவரும் பொலிஸில் முறைப்பாடு செய்வதுமில்லை; அது இறந்தாலும் எவரும் அதற்காக கவலைப்படுவதில்லை. அது உயிர் வாழ்வதாகக் கருதி, எவரும் விசேடமாக மகிழ்ச்சியடைய போவதுமில்லை .

20 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட ஆணைக்குழுக்கள், முதுகில் சூடு குத்தப்பட்ட கைவிடப்பட்ட மாட்டை போன்வையாகும். குறைந்தபட்சம் தேர்தலில் அதிகாரத்தை கைப்பற்ற எதிர்பார்க்கும் அரசியல் கட்சியொன்று கூட, இப்போது அரசசேவை இலஞ்ச ஊழல், பொதுப் பயன்பாடுகள் அரசகரும மொழிகள், எல்லை நிர்ணயம் போன்ற ஆணைக்குழுக்கள் பற்றிக் கதைப்பதில்லை.

சிறந்த மாவட்ட செயலாளராகவும் கௌரவத்துக்குரிய சுங்கப் பணிப்பாளர் நாயகமாகவும் செயலாளராகவும் பணியாற்றிய பி.எஸ்.எம். சார்ள்ஸ் வடமாகாண ஆளுநர் பதவியிலிருந்து நீக்கப்பட்டு, தேர்தல் ஆணைக் குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜீவன் தியாகராஜா, தேர்தல் ஆணைக் குழுவின் உறுப்பினர் பதவியிலிருந்து வடமாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார். அரசியல் கட்சிகள் கவனம் செலுத்தாததைப் போன்று, இந்த இடத்திலும் இந்த விடயம் பற்றி சுதந்திரமான முறையில் கருத்துகள் அறியப்படவில்லை. இதுபற்றி, அறிக்கைகளோ, பாராளுமன்றக் கூற்றுகளோ, குறைந்தபட்சம் நகைச்சுவைகளோ கார்ட்டூன்களோ வெளியாகவில்லை.

ஏனைய ஆணைக்குழுக்களை விட, தேர்தல் ஆணைக்குழு அரசியலுக்கு மிகவும் முக்கியமானது. முன்னாள் போராளியான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் மிக நெருங்கிய சகாவான ஜீவன் தியாகராஜா, தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினராக அரசியலமைப்பின் 14ஆவது உறுப்புரையின் 103ஆவது சரத்துக்கு (தொழில்வாண்மை, நிர்வாகம், கல்வி ஆகிய துறைகளில் உயர் நிலையை அடைந்திருக்க வேண்டும் என்ற விதிமுறைக்கு) புறம்பாக நியமிக்கப்பட்டார்.

கஃபே, மனித உரிமைகள் கேந்திர நிலையம், ஊழல் ஒழிப்பு முன்னணி, உமா ஓய போராட்டக்குழு என்பனவற்றின் உறுப்பினரான கீர்த்தி தென்னக்கோன், ஆளுநராக நியமிக்கப்பட்ட போது சமூக ஊடகங்களில் ஆச்சரியமான கருத்துகள் வெளியிடப்பட்டன. சுமார் 112 பதிவுகளைச் சேகரித்து வைத்திருக்கின்றேன். தேர்தல் கண்காணிப்பாளர் ஒருவரும் தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவரும் இதில் அடங்குகிறார்கள் .

இலங்கை தேர்தல் ஆணைக்குழுவின் முன் மாதிரி, இந்திய தேர்தல் ஆணைக்குழு ஆகும். இந்தியாவின் 11 ஆவது தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் கலாநிதி எம் எஸ் கில் (1996 - 2001) பதவியில் இருந்து விலகி ஏழு வருடங்களின் பின்னர், தேர்தல் மூலம் இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சராக நியமிக்கப்பட்டார். தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர், தேர்தலில் போட்டியிட்டு அமைச்சரான வெற்றி, சமூகத்தில் மாறுபட்டு கலந்துரையாடல்களை ஏற்படுத்தியது.

தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய, தேர்தலில் போட்டியிட வேண்டும் என்று முகநூல் ஊடாக பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. அதற்கு


ஜீவன் தியாகராஜா


பி.எஸ்.எம். சார்ள்ஸ்

தேர்தல் ஆணையாளர் இவ்வாறு பதில் அளித்தார். "மஹிந்த தேசப்பிரிய ஆகிய நான், ஜனாதிபதித் தேர்தலிலோ பொது தேர்தலிலோ போட்டியிடப் போவதில்லை. அவ்வாறான கோரிக்கைகளையும் முன்வைக்க வேண்டாம் என்று நான் கோரிக்கை விடுக்கிறேன். தேர்தல் ஆணைக்குழுவின் தலைவராக இருந்த ஒருவர், தேர்தலில் போட்டியிடுவது தார்மிகத்துக்கு முரணானதாகும் என்று கருதுகிறேன் என்பது எனது நிலைப்பாடாகும்" எனக் கூறினார்.

தேர்தல் ஆணைக்குழு என்றும் முன்மாதிரியாகச் செயற்பட வேண்டும். ஆணைக் குழுவின் உறுப்பினர் பதவியிலிருந்து விலகும் நிபந்தனையுடனேயே, ஜீவன் தியாகராஜா வடமாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டார். மஹிந்த தேசப்பிரியவின் முன்மாதிரி, ஜீவன் தியாகராஜாவுக்கு பொருந்துவதாக அமையவில்லை. நாட்டு மக்களுக்கு அது பொருந்துவதாகவும் அமையவில்லை.

2019ஆம் ஆண்டு தேர்தல் கண்காணிப்பாளர் ஒருவருக்குக்கு இருந்த முக்கியத்துவம் கூட, 2021ஆம் ஆண்டு தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினருக்கு முக்கியமானதாக அமையவில்லை. 17 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட ஆணைக்குழுவுக்கு, பெப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கிங்ஸ்லி ரொட்ரிகோவின் பெயர் முன்மொழியப்பட்ட போது, இதைவிட அரசியல் கட்சிகளும் அமைப்புகளும் கூடுதலாக கரிசனைகாட்டின.

அன்று, தனி நபராக இருந்த கிங்ஸ்லி ரொட்ரிகோவுக்கு இருந்த முக்கியத்துவம், இன்று சார்ள்ஸ், தியாகராஜா மாற்றத்துக்கு இல்லை. அவ்வாறு இல்லையெனில் இந்தியாவின் புகழ்பெற்ற ஒன்பதாவது பிரதம ஆணையாளரான வீ. எஸ் ராம தேவி, கர்நாடகா மாநிலத்தில் ஒரே ஆளுநராக நியமிக்கப்பட்டார். ராம தேவிக்கு நல்லதாக இருப்பின், தியாகராஜாவுக்கு தீமையாக அமையாது என்று முழு நாடும் சிந்திப்பதாக இருக்கவேண்டும்.

2019ஆம் ஆண்டு, அன்றைய தேர்தல் ஆணைக்குழு கீர்த்தி தென்னகோனால் கபே அமைப்பின் கண்காணிக்கும் அதிகாரத்தை வரையறுத்தது. தற்காலிகமாக இடைநிறுத்துவதாகவும் அறிவித்தது. இப்போது தேர்தல் ஆணைக்குழுவும் அதன் (உறுப்பினர்களும்) யாராலும் கண்டுகொள்ளப் படாமையினாலாலோ என்னவோ அதே ஆணைக்குழு ஜீவன் தியாகராஜாவை ஆளுநர் என்ற ரீதியில் வரவழைத்து நினைவுச் சின்னம் ஒன்றையும் பரிசாக வழங்கியது.

தேர்தல் ஆணைக்குழுவின் கட்டடத்தில் ஐந்து ஆணையாளர்களின் படங்கள் இருந்தாலும் ஆறாவது ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவின் படம் அங்கு காட்சிப்படுத்தப்படவில்லை என்பது எவருக்கும் நினைவில் இருக்காது. தேர்தல் ஆணைக்குழுவின் தொடர்ச்சி என்ற விடயமானது, முன்னாள் தேர்தல் ஆணையாளரிடமிருந்தேனும் ஆரம்பிக்கப் படுவது அவசியமாகும்.

கடந்தகால சம்பவம் ஒன்றை ஞாபகமூட்டுகிறேன். பதுளை, அநுராதபுரம் ஆகிய இடங்களில் உதவித் தேர்தல் ஆணையாளராக இருந்த டீ. கே தசநாயக்க, 1977ஆம் ஆண்டில் அவரது திறமை, நேர்மை, பக்கசார்பின்மை ஆகிய பண்புகளால், அநுராதபுர மாவட்ட செயலாளராக தெரிவு செய்யப்பட்டார். பின்னர், அமைச்சின் செயலாளராக பணியாற்றிய அவர், ஓய்வு பெற்ற போதும் மத்திய மாகாணத்தின் ஐந்தாவது ஆளுநராக நியமிக்கப்பட்டார். சவால்களை வெற்றி கொள்ளக்கூடிய அதிகாரிகள் மீது, முன்பிருந்த அரசியல்வாதிகள் விருப்பம் கொண்டிருந்தார்கள்.

ஆளுநர் பதவியானது உத்தியோகபூர்வ பதவிநிலையில் தேர்தல் ஆணைக்குழுவை விட உயர்ந்த இடத்தில் உள்ளது என்பதை இங்கு வழங்கப்பட்டுள்ள செய்தியின் மூலம் தெளிவாகிறது. அதாவது, ஜீவன் தியாகராஜாவை போன்று, பதவிகளை நோக்கிச் செல்ல, தேர்தல் ஆணையாளர்களுக்கு வாய்ப்பு காணப்படுகிறது. தேர்தல் ஆணையாளர்கள் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து, வெளிநாட்டு ராஜதந்திரிகளாக நியமிக்கப்படும் சம்பிரதாயம் காணப்பட்டது.

திருமதி சாள்ஸ், முன்னாள் தெரிவத்தாட்சி அதிகாரி ஆவார். வாக்குகளைப் பதிவு செய்யும் அதிகாரி, ஈ.பி.டி.பி, கருணா, பிள்ளையான், ஈரோஸ், அமீர்அலி, ஹிஸ்புல்லாஹ், ரிசாத் பதியுதீன், தமிழ் தேசிய கூட்டமைப்பு, இராயப்பு ஜோசப் ஆண்டகை போன்ற தரப்புகளை முகாமைத்துவம் செய்த மாவட்ட செயலாளர் ஆவார். யுத்ததத்தோடு நிர்வாகம் செய்த அவர், ஆயுததாரிகளிடமிருந்து உயிரையும் பாதுகாத்துக் கொண்டதோடு, அரசாங்கத் தொழிலையும் தக்கவைத்துக் கொண்டார்.

பெண்கள் ஊழல் மோசடிகளில் ஈடுபட மாட்டார்கள் என்ற விடயத்தை அடிப்படையாகக்கொண்டு, அவர் சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டார். தபால் திணைக்களம் அதன் உயர் பதவிக்கு ஒருவரைத் தேடிக் கொண்டிருந்த வேளையில், 35 சுங்க அதிகாரிகள் பணி நீக்கம் செய்யப்பட்டாலும் அவர்களை வெளியேற்ற வேண்டாம் என்று கூறிய பணிப்பாளர் நாயகம் இவராவார். சுகாதார அமைச்சில் பல வருடங்களாக நிலவிய முகாமைத்துவம் தொடர்பான நெருக்கடிகளை ஒரு மாதத்துக்குள் இவர் தீர்த்து வைத்தார். அவர் 20 வருடங்களாக நிறுவனங்களின் தலைவராக பணியாற்றினார். அவருக்கெதிராக எந்த ஒரு குற்றச்சாட்டும் முன்வைக்கப்படவில்லை. ஆனால், இன்று அவர் தேர்தல் ஆணைக்குழுவின் மற்றுமோர் உறுப்பினர் மாத்திரமே ஆவார்.

20 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் உருவாக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் கைவிடப்பட்ட மாட்டை போன்று எவருக்கும் பயனற்றதாக இருக்கும் என்பதை அறிந்து அதற்கெதிராக நான் நீதிமன்றத்தை நாடினேன். என்னால் முடியுமான அனைத்தையும் செய்தேன் எனது அன்றைய எண்ணம் சரியானது என்பதை இப்போது உணர்கின்றேன். சகல ஆணையாளர்களும் ஆளுநர்களாக மாறினாலும் கூட அதுபற்றி எவரும் கதைக்க மாட்டார்கள். ராஜா கொல்லுரே உட்பட சகல ஆளுநர்களும் ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டாலும் அதுபற்றி எவரும் கருத்து கேட்கமாட்டார்கள். சார்ல்ஸ் மற்றும் தியாகராஜாவின் நியமனங்கள் பற்றி விரிவாக நோக்கும் உலகமே மிகவும் அழகாக அமையும்.

# கந்தசஷ்டி விரத மகிமைகள்

## நேற்று (05) ஆரம்பித்த கந்தசஷ்டி விரதம் புதன்கிழமை (10) சூரசம்காரத்துடனும் மறுநாள் வியாழக்கிழமை பாரணையுடனும் நிறைவுபெறுகின்றது.

இளங்காடியன்

கந்த சஷ்டிவிரதம், தீபாவளி அமாவாசை முடிந்து முதல் நாள் தொடங்கி, ஆறு நாள்கள் தொடர்ந்து நடைபெறுகிறது. கந்த சஷ்டி என்பது, முருகக் கடவுள் சூரனை அழித்த பெருமையை சைவ சமயத்தவர்கள் கொண்டாடும் ஒரு விழாவாகும். சஷ்டி என்றால் ஆறு ஆகும். ஐப்பசி மாதம் சுக்கிலபட்ச பிரதமை முதல் சஷ்டி ஈறாக உள்ள ஆறு நாள்களும் கந்த சஷ்டி காலமாகும். இந்த ஆறு நாளையும் சைவர்கள் விரத நாள்களாக அனுட்டிக்கின்றனர்.

செல்வங்கள், சுகபோகங்கள், நற்புத்திரப்பேறு என்பவற்றை முன்னிட்டு முருகனை வழிபடுவோரும் பிறரும் இந்த விரதத்தை அனுஷ்டிப்பர். இந்த ஆறு நாள்களும் சைவர்கள் விரதமிருந்து, அதிகாலையில் எழுந்து நீராடி பூரண கும்பம் வைத்து விளக்கேற்றி பூசை வழிபாடு செய்வர்.

தீவிர முருக பக்தர்கள் இவ்விரதத்தை ஒரு கடுந் தவமாகக் கருதி, ஆறு தினங்களும் உபவாசம் இருத்தல் வழக்கம். இவ்விரத முறைமையை அனுசரிக்க இயலாதவர்கள், ஐந்து தினங்கள் ஒரு வேளை பால், பழம் மட்டும் அருந்தி, ஆறாம் நாள் உபவாசம் இருத்தலும் நடைமுறையாக உள்ளது. ஏழாம் நாள் பாரணை அருந்தி விரதத்தை நிறைவேற்றுவர்.

தொடக்க தினத்தில், கோவிலில் தர்ப்பை அணிந்து, காப்புக்கட்டல் அதாவது சங்கற்பம் செய்தல் வழக்கம். பக்தர்கள் ஆறு தினங்களும் முருகன் கோவிலில் இறைவழிபாடு, புராணம் பாடல் போன்ற புனிதச் செயல்களில் ஈடுபடுவர். இறுதி நாளில் காப்பை அவிழ்த்து, தட்சணையுடன் அர்ச்சகரிடம் சமர்ப்பிக்க வேண்டும். ஏழாம் நாள் அதிகாலை நீராடி அனுஷ்டானங்களை நிறைவேற்றி, பாரணைப் பூஜை முடிந்ததும் மகேஸ்வர பூசை செய்து விரதத்தைப் பூர்த்தி செய்யலாம்.

மனிதர்களின் உட்பகையாக உள்ள காமம், வெகுளி, ஈயாமை (உலோபம்), மயக்கம், செருக்கு, பொறாமை ஆகிய அசுரப் பண்புகளை அழித்து, அவர்கள் தெய்வீக நிலையில் பெருவாழ்வு வாழ அருள் பாலிக்கும் இறைவன் ஆற்றலின் பெருமை கந்த சஷ்டி உணர்த்தும் மெய்ப்பொருள் ஆகும்.

முருகப் பெருமான் சூரசங்காரம் செய்து தேவர்களைக் காத்த அருட் செயலைக் குறிக்கும் இவ்விழாவின் ஆறாம் நாள், முருகன் கோவில்களில் 'சூரன் போர்' நிகழ்வு நடைபெறுவது வழக்கம். சூர சம்காரத்தின் முடிவில், முருகன் மா மரமாக நின்ற சூரனை, தன் சக்தியாகிய வேலினால் பிளந்தார். பிளவுபட்ட மாமரம் சேவலும் மயிலுமாக மாறவும், சேவலை கொடியாகவும் மயிலை வாகனமாகவும் முருகன் ஏற்றுக்கொண்டார். இது கந்தபுராணத்தில் சொல்லப்பட்ட ஒரு நிகழ்ச்சியாகும்.

கந்தபுராணத்தில் வரும் சூரபத்மன், சிங்கமுகன், தாரகாசுரன் ஆகியோர் முறையே சைவ சித்தாந்தத்தில் பேசப்படும் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களைக் குறிப்பதாகக் கருதப்படுகின்றது.

ஆன்மாவைத் துன்புறுத்தும் மலங்களின் கெடுபிடியில் இருந்து ஆன்மாவுக்கு விடுதலை அளிப்பதோடு ஆணவமலத்தின் பலத்தைக் குறைத்து, அதனைத் தன் காலடியில் இறைவன் வைத்திருப்பதை உணர்த்துவதே சூர சம்காரமாகும்.

மனித மனம் விரதத்தின் போது, தனித்து விழித்து பசித்து, இருந்து ஆறு வகை அசுத்தங்களையும் அகற்றித் தூய்மையை அடைகின்றது. தூய உள்ளம், களங்கமற்ற அன்பு, கனிவான உறவு என்பவற்றுக்கு அத்திவாரமாக கந்தசஷ்டி விரதம் அமைகிறது.

விரதத்துக்கு முதல் நாளன்றே வீட்டைக் கழுவி சுத்தப்படுத்தி, மஞ்சள் நீர் தெளித்தல் அவசியம். விரத நாளன்று அதிகாலையில் துயிலெழுந்து நீராடி தோய்த்துலர்ந்த ஆடைகளை அணிந்து, காலையும் மாலையும் வீட்டின் சுவாமி அறையில் விளக்கேற்றி, வீபூதி பூசி, தேவரங்கள் பாடுதல் வேண்டும்; அத்துடன், கோவில் வழிபாடு செய்தல் மிகவும் நன்று.

ஊனை உருக்கி, உள்ளொளி பெருக்கும் இவ்விரதத்தை, தம் உடல் நிலைக்குத் தக்கதாக கடைப்பிடிக்க வேண்டும் . சிலர் ஆறு நாள்களும் எவ்வித அன்ன ஆகாரமின்றியும், சிலர் பானம் மட்டும் அருந்தியும், பலர் முதல் ஐந்து நாள்களும் ஒரு நேரம் உணவு உண்டு (பாலும் பழமும்) கடைசி நாளான ஆறாம் நாள் முழு உபவாசத்துடன் நித்திரை விழித்திருந்தும் ஏழாம் நாள் காலை முருகனை வழிபட்ட பின்னர் பாரணை மூலம் விரதத்தைப் பூர்த்தி செய்வர்.

கந்த சஷ்டி விரதத்தின்போது, தினமும் கந்த சஷ்டி கவசம், கந்தர் அலங்காரம், கந்தர் அனுபூதி, திருப்புகழ், கச்சியப்ப சுவாமிகளின் கந்த புராணம் ஆகியவற்றைப் படித்தால், வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத மனஅமைதி நிலவும்.

முருகனுடைய விரதங்களுள் கந்த சஷ்டி விரதம், கார்த்திகை விரதம், வெள்ளிக்கிழமை விரதம் ஆகிய மூன்றும் பிரதானமானவையாகும். கந்த சஷ்டி விரதம் தொடர்ந்து ஆறு வருடங்களும், கார்த்திகை விரதம் பன்னிரெண்டு வருடங்களும் வெள்ளிக்கிழமை விரதம் மூன்று வருடங்களும் அனுஷ்டிக்கப்படுகின்றது. அசுர சக்திகளின் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும் மலங்களை மட்டுமன்றி ஆறுவகை எதிரிகளான காமம், கோபம், பேராசை, செருக்கு, மயக்கம், பெருமை ஆகிய வகைகளை அழித்து முற்றுணர்வு, வரம்பிலாற்றல், தன் வயமுடைமை, வரம்பின்மை, இயற்கையுணர்வு,



பேரருள் ஆகிய தேவ குணங்களை நிலை நாட்டியதால் கந்த சஷ்டி விரதமே பெருவிழாவாக எடுக்கப்படுகின்றது.

ஏனைய விரத அனுட்டானங்களைப் போலன்றி கந்த சஷ்டி விரதானுஷ்டானத்தை பெருவாரியான ஆண்களும், பெண்களும், பிள்ளைகளும் கடைப்பிடிக்கின்றார்கள். மாணவர்கள் கல்விக்காகவும் குடும்பப் பெண்கள் குடும்ப நன்மைக்கும், கன்னிப் பெண்கள் நல்ல கணவனை வாழ்க்கைத் துணையாக அடைய வேண்டியும், குழந்தை இல்லாதோர் குழந்தை வேண்டியும் இவ்விரதத்தை அனுஷ்டிக்கின்றனர்.

குடும்பத்தில் துன்பங்கள் நீங்கவும், வேலைவாய்ப்பு, கடன் தொல்லை நீங்கவும் இவ்விரதத்தை கடைப்பிடிப்பது நன்று. 'சட்டியில் இருந்தால், அகப்பையில் வரும்' என்பது பழமொழி. இதன் உண்மையான பொருள், சஷ்டியில் விரதமிருந்தால் கருப்பையில் குழந்தை உண்டாகும் என்பதாகும். எனவே, குழந்தை வரம் வேண்டும் பெண்களுக்கு இது மிகவும் சிறந்த விரதமாகும்.

முதல் ஆறு நாட்களும் உமிழ் நீரும் உள்ளே விழுங்காதவாறு நோன்பிருந்து இவ்விரதத்தை இருப்பது ஒருமுறை. அவ்வாறு இயலாதவர்கள் அந்நாள்களில் ஒருமுறை வீதம் ஆறு மிளகையும் ஆறு கை நீரையும் அருந்தலாம். உயிர் உணர்ச்சி வளர்க்கும் விரதம் இது. எனவே உப்பு நீர், எலுமிச்சம் பழச்சாறு, நாரத்தம் பழச்சாறு, இளநீர் முதலியவற்றை கந்த சஷ்டி விரதம் இருப்பவர்கள் அருந்தக்கூடாது.

பொதுவாக விரத தினங்களில் மக்கள் சைவமாக இருந்தால் போதும் என்று எண்ணிக் கொண்டு, பலகாரங்களை விருப்பமாக உண்ணுகின்றனர். ஆனால், விரதத்தை நியமத்தோடு கூடியதாக இருப்பதே முழுபலனைத் தரும்.

கந்தசஷ்டி விரதம் இருப்பவர்கள் மதியம் உச்சிவேளையில் ஒருபொழுது மட்டும் பச்சரிசி உணவு தயிர் சேர்த்து உண்ண வேண்டும். காலை மற்றும் இரவில் பால், பழங்கள் மட்டும் சாப்பிடலாம். ஆனால், வயோதிபர்கள், நோயாளிகள் ஆகியோர் விரதத்தின் போது அவரவர் உடல் நிலைக்கு தக்கபடி நடந்து கொள்ள விதிவிலக்கு உண்டு. காலை, மாலை ஆகிய இருவேளையும் நீராடுவது நல்லது. காலை, மாலை வழிபாட்டின் போது அவசியம் கந்தசஷ்டி கவசம் பாராயணம் செய்வதோ அல்லது கேட்கவோ செய்ய வேண்டும்.

சூரசம்ஹார தினத்தன்று அதிகாலையில் எழுந்து நீராடிவிட்டு, அவரவர் வழக்கப்படி விபூதி, சந்தனம், குங்குமம் இட்டு பூஜை அறையில் வழக்கமான இடத்தில் திருவிளக்கினை ஏற்றி, குலதெய்வத்தை மனதார கும்பிடுங்கள். மனம் முழுவதும் அந்த மயில்வாகனனையே நினைத்தபடி கந்தசஷ்டிகவசம், கந்தகுரு கவசம், கந்தர் அனுபூதி, சுப்ரமண்ய புஜங்கம் போன்ற உங்களுக்குத் தெரிந்த துதிகளைச் சொல்லுங்கள்; அல்லது, கேளுங்கள். ஏதும் இயலாதவர்கள் கந்தா சரணம், முருகாசரணம், கார்த்திகை பாலா சரணம் என்று உங்களுக்குத் தெரிந்தபடி சரணங்களைச்சொல்லுங்கள்.

"முன் செய்த பழிக்குத் துணை முருகா என்னும் நாமம்" என்பார் அருணகிரிநாதர். முருகப்பெருமானுக்குரிய சஷ்டி விரத நாட்களில் முடிந்தவரை ஓம் முருகா! என்று ஜபிப்பது நன்மை தரும். நிறைவாக தீப ஆராதனை காட்டியபின் இயன்ற நிவேதனம் செய்யுங்கள். பாலும், பழமும் இருந்தாலும் போதும். எளியோர்க்கும் எளியோனான கந்தக் கடவுள் அன்போடு அளிப்பதை ஏற்றருள்வான்.

அன்று மாலை, ஒரு சிலர் முருகப்பெருமான் சூரனை வதம் செய்த கோலத்தை தரிசனம் செய்துவிட்,டு நீர் நிலைகளிலோ நீராடவேண்டியது அவசியம். அன்று இரவு பக்கத்திலுள்ள முருகன் கோவிலுக்குப் போய், தரிசனம் செய்து (முடிந்தால் மாவிளக்கு போடுங்கள்) பச்சரிசி சாதம் சாப்பிட்டு விரதத்தை நிறைவு செய்ய வேண்டும். வேறு சிலரோ, மறுநாள் முருகன் கோவில்களில் நடக்கும் பாவாடை நைவேத்யத்தை தரிசனம் செய்த பின்னரே சாப்பிடவேண்டும் என்றும் கூறுவர்.

வேலவன் அருளால் மணப்பேறு, மகப்பேறு, நல்வாழ்வு, ஆரோக்கியம், ஆயுள், புகழ், செல்வம் என்று நீங்கள் வேண்டிய யாவும் நிச்சயம் கைகூடும். நிம்மதி, சந்தோஷம், உற்சாகம் வாழ்வில் நிறையும். நம் பிறவிப்பிணி நீங்கி முருகனருள் எப்போதும் துணை நிற்கும்.




## வடக்கு மண்ணின் நவீன நகரம்

# மாங்குளம்

சுப்பரமணியம் பாஸ்கரன்



**வடமாகாணத்தின் மையப்பகுதியாக அமைந்துள்ள மாங்குளம் பிரதேசம், கடந்த மூன்று சகாப்த காலமாக இடம்பெற்ற போரால், முழுமையாக அழிவடைந்து சின்னாபின்னமாகிய ஒரு பிரதேசமாக காணப்படுகின்றது.**

யுத்தம் நிறைவு பெற்று, மக்கள் மீள்குடியேறி 12 ஆண்டுகள் கடந்த போதும், இந்தப் பிரதேசம் ஒரு நகர அமைப்பை கொண்டிக்காமலும் அடிப்படைக் கட்டுமானங்கள் சீர் செய்யப்படாமலும் காணப்படுகின்றது.

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களையும் இலங்கையின் ஏனைய மாவட்டங்களையும் இணைக்கின்ற ஒரு போக்குவரத்து மார்க்கத்தின் மையமாகவே, முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பிரதேசம் காணப்படுகின்றது.

ஏ-9 வீதியின் வடக்கு, கிழக்கு, தெற்கு பகுதிகளுக்கான பிரதான வீதியும் முல்லைத்தீவிலிருந்து மாங்குளம் வரையும் மாங்குளத்திலிருந்து மன்னார் யாழ்ப்பாணம் ஏ-32 வீதியை இணைக்கும் இணைப்பு வீதியும் சந்திக்கும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரதான சந்தியாக, மாங்குளம் சந்தி பன்னெடுங்காலமாக காணப்படுகின்றது.

மாங்குளம் மைய நகரமானது, மிகவும் பழைமை வாய்ந்த ஒரு நகரமாகக் காணப்படுகின்றபோதும், மூன்று தடவைகளுக்கு மேல் போரினால் முழுமையாகவே அழிவடைந்துள்ளது.

யுத்தகாலத்துக்கு முன்னர் மாங்குளம் பகுதியில் பலவசதிகளைக் கொண்ட ஒரு வைத்தியசாலை, பிரதான தபாலகம், பாடசாலை, ரயில் நிலையம், பொதுச்சந்தை, வங்கிகள், வன பரிபாலன திணைக்களம், பொலிஸ் நிலையம் உள்ளிட்ட திணைக்களங்கள் காணப்பட்டன.

1990ஆம் ஆண்டுகளின் பின்னர் ஏற்பட்ட யுத்தம் காரணமாக, இவை அனைத்தும் முழுமையாக அழிவடைந்தன. இங்கு வாழ்ந்த மக்களும் இடம்பெயர்ந்தனர்.

இந்தப் பிரதேசத்தில் இயங்கிய தபாலகம், பாடசாலை, வங்கிகள் என்பன மல்லாவியில் தற்காலிகமாக இயங்கியபோதும் ஏனைய திணைக்களங்கள் செயலிழந்து போயின.

1994ஆம் ஆண்டின் பின்னர் நிலவிய சாதாரண சூழ்நிலையில், பெரும் இடியாடுகளுடன் சிதைந்து காணப்பட்ட மாங்குளம் நகரத்தில், தபாலகம், வைத்தியசாலை, பாடசாலை போன்றன இயங்க ஆரம்பித்தன; இடம்பெயர்ந்த மக்களும் மீள்குடியேறினர்.

இதன் பின்னர், 1997ஆம் ஆண்டு, தினமும் கடுமையான போர் இடம்பெற்ற பகுதியாகவும் போரில் ஈடுபட்ட தரப்புகளின் வெற்றி-தோல்வியைத் தீர்மானிக்கும் இடமாகவும் மாங்குளம் நகரம் காணப்பட்டதுடன், இங்கு வாழ்ந்த மக்கள் முழுமையாகவே இடம்பெயர்ந்து சென்றனர்.




> **பொது மக்களின் தேவைகருதி நவீன வசதிகொண்ட பஸ் நிலையம், பொதுமலசலகூட வசதி போன்ற அடிப்படைக் கட்டமைப்புக்கள் மாங்குளம் நகரில் அமையவேண்டும்**

அப்போது வடக்குக்கான நுழைவாயிலாக மாங்குளம் காணப்பட்டதுடன், வன்னியில் உள்ள மக்களுக்கான உணவு, மருந்து, அத்தியாவசியப் பொருட்களைத் தன்னார்வத்தொண்டு நிறுவனத்தின் கண்காணிப்பில் கொண்டு செல்லும் நுழைவுப் பாதையாகவும் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

2006ஆம் ஆண்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக, இங்கு வாழ்ந்த மக்கள் மீளவும் முழுமையாக இடம்பெயர்ந்து சென்று, யுத்தம் நிறைவடைந்த பின்னர், 2009ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் மீள்குடியேறி இன்றுவரை வாழ்ந்து வருகின்றனர்.

மக்கள் மீள்குடியேறி 12 வருடங்கள் கடந்துவிட்டன. ஆனால், இங்கு அபிவிருத்திகள் என்பது மிகமிகக் குறைவாகவே காணப்படுகின்றது.

வடக்கு மாகாணத்தின் மையமாக, மாங்குளம் காணப்படுகின்றமையால், வடக்கு மாகாண சபை மற்றும் அது சார்ந்த அலகுகளையும் இங்கு அமைப்பதாகவும் மாகான சபையால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், அவை எதுவும் இடம்பெறவில்லை. இது ஒருபுறமிருக்க, முல்லைத்தீவிலிருந்து மாங்குளத்துக்கும் மாங்குளத்திலிருந்து மல்லாவி, துணுக்காய், மன்னார் ஆகிய பகுதிகளுக்கும் ஏ-9 வீதி யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய பகுதிகளுக்கும் தேவை கருதி, தினமும் இரவு பகலாக 5,000க்கும் அதிகமான பயணிகள் ஒன்று கூடும் ஓர் இடமாக காணப்படும் மாங்குளம் நகரத்தில், இதுவரை ஒரு பஸ் நிலையம் அமைக்கப்படவில்லை.

இதனால், தேவைகருதி வரும் பயணிகள், நான்கு வீதிகளிலும் கொட்டும் மழையிலும் வெயிலிலும் காத்திருந்து பயணிக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

இங்குள்ள வைத்தியசாலை, விபத்துக்களில் பாதிக்கப்படுவோர், திடீரென நோய்வாய்ப் படுபவர்களுக்கு, சிகிச்சை அளிக்க ஏதுவான, அடிப்படை வசதிகள் கூட இல்லாத வைத்தியசாலையாகவே காணப்படுகின்றது.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, தினமும் 5,000க்கும் அதிக பயணிகள், மக்கள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் தமது அடிப்படையான இயற்கை கடமைகளை நிறைவு செய்வதற்கு, ஒரு பொதுமலசலகூட வசதிகூட இன்றி மாங்குளம் நகரம் காணப்படுகின்றது.

வடக்கின் மையப்பகுதியாக அமைந்துள்ள மாங்குளம் நகரம் இன்றுவரை முழுமை பெறாமல் அடிப்படை கட்டுமானங்கள் கூட சீர் செய்யப்படாமல் காணப்படுகின்றன.

எனவே, போரால் நான்கு தடவைகளுக்கு மேல், நேரடியான பாதிப்புகளை எதிர்கொண்ட ஒரு நகரம், இங்கு மீள்குடியேற்ற ஆரம்பத்தில் எந்த கட்டுமானங்களும் இருக்கவில்லை.

மாங்குளம் நகரத்தை அன்டிய பிரதான வீதி பகுதிகளில், பொதுக்காணிகள் உள்ள போதும் இப்போது பொருத்தமற்ற இடத்தில் பொதுச்சந்தையும் பஸ் நிலையமும் அமைக்கப்பட்டு, எந்தப் பயன்பாடும் இல்லாத நிலையில், கால் நடைகளின் உறைவிடமாகக் காணப்படுகின்றது.

கடந்த பத்து ஆண்டுகளில், துணுக்காய் வலயக்கல்வி அலுவலகம், பாடசாலை, வைத்தியசாலை, பொலிஸ் நிலையம், தபாலகம், ரயில் நிலையம், பொதுச்சந்தை போன்ற கட்டுமானங்கள் காணப்படுகின்றபோதும், இதனைவிட வடக்கு மாகாணத்தின் நிர்வாக கட்டமைப்பு, திணைக்களங்கள் வடக்குக்கான பொருளாதார மத்திய நிலையம் அமையப்பெறவேண்டும்.

இங்கு தேவைகருதி வரும் பயணிகள், பொது மக்களின் தேவைகருதி நவீன வசதிகொண்ட பஸ் நிலையம், பொதுமலசலகூட வசதி போன்ற அடிப்படைக் கட்டமைப்புக்கள் கொண்ட, வடக்கு மாகாணத்தின் நவீன நகரமாக மாங்குளம் அமையவேண்டும் என்பது பலரதும் கோரிக்கையாகவே இருந்து வருகின்றது.





# கல்விக்காய் கண்திறவாய்

வ. சக்திவேல்
shagthivel@gmail.com





"இந்தப்பாடசாலையில்தான் நான் ஆரம்பக்கல்வியைக் கற்றேன். பின்னர், 1983ஆம் ஆண்டு ஜூலைக் கலவரத்தால், இப்பாடசாலையின் நடவடிக்கைகள் தடைப்பட்டிருந்தன. பின்னர், மீண்டும் இயங்கியது. மீண்டும் யுத்தம் ஏற்பட அதிலிருந்து மூடப்பட்ட பாடசாலை, இன்றுவரை மூடப்பட்டே உள்ளது. எனவே இப்பாடசாலையை மீண்டும் திறந்து, பாடசாலையை மீள இயங்க வைப்பதற்குரிய நடவடிக்கையை சம்மந்தப்பட்டவர்கள் மேற்கொள்ள வேண்டும்" என, 25 ஆம் கிராமத்தின் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் முன்னாள் செயலாளர் சின்னப்பு நல்லையா தெரிவிக்கின்றார்.

"எமது கிராமத்தில் தமிழ் மக்களும் சிங்கள மக்களும் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றோம். கடந்த காலங்களிலும் அவ்வாறுதான் வாழ்ந்து வந்தோம். இந்நிலையில், எமது கிராமத்தில் ஆரம்ப பாடசாலை ஒன்று இயங்கி வந்தது. அதில் சிங்கள பிள்ளைகளும் தமிழ் பிள்ளைகளும் கற்று வந்தார்கள். 2004 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அப்பாடசாலை இன்றுவரை மூடிக்கிடக்கின்றது. தற்போது பாடசாலைக் கட்டடமும் பழுதாகும் நிலையில் காணப்படுகின்றது. மீண்டும் எமது பாடசாலையை இயக்க வைக்க வேண்டும் என, இக்கிராமத்தில் வாழும் சிங்கள மக்களும் தமிழ் மக்களும் விரும்புகின்றார்கள். எமது கிராமத்தில் வாழும் 18 வயதிற்குக் குறைந்த தமிழ் பிள்ளைகள், தமது கல்வியைத் தொலைத்த நிலையில் திரிகின்றார்கள்" எனத் தெரிவிக்கின்றார் 25 கிராமத்தில் வாழும் சிங்கள சகோதரியான இந்திராணி.

"எமது கிராமத்தில், மிக நீண்டகாலமாக பாடசாலைக் கட்டடம் மூடிக்கிடக்கின்றது. எமது கிராமத்துப் பிள்ளைகள், மிக நீண்டதூரம் யானைக் காட்டு வழியாக, கால் நடையாக நடந்துதான் கற்வி கற்று வருகின்றார்கள். எமது கிராமத்தில் வீதிகள் அனைத்தும் குன்றும் குழியுமாக உள்ளன. மழைக் காலத்தில் சேறும் சகதியுமாகக் காணப்படும். கோடைகாலத்தில் வரண்டபோய் காணப்படும். பாடசாலைக்கு மிக நீண்ட தூரம் ஆகையால், எமது கிராமத்துப் பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்வதற்கு இயலாது என தெரிவிக்கின்றார்கள். இவற்றைவிட குடிப்பதற்குக்கூட எமது கிராமத்தில் நீர் இல்லை. அருகிலுள்ள அம்பாறை மாவட்டத்துக்குச் சென்றுதான் குடிநீரைப் பெற்று வருகின்றோம். இந்நிலையில், எவ்வாறு பிள்ளைகள் கல்வியைத் தொடர்வது என தெரியாதுள்ளது. எனக்கு தற்போது 22 வயது. எனக்கு நினைவு தெரிந்த காலமிருந்து, எமது கிராமத்திலுள்ள பாடசாலை மூடப்பட்டுத்தான் உள்ளது. எனவே, எமது கிராமத்திலுள்ள பாடசாலையை மீளத் திறப்பதற்கு அதிகாரிகள் முன்வரவேண்டும்" எனத் தெரிவிக்கின்றார் அக்கிராமத்தைச் சேர்ந்த கருணாகரன் சந்திரமலர்.

பழுதடைந்த வீதியூடாக, சுமார் ஒன்றரை மணித்தியாலம் கால்நடையாக, காட்டு யானைகளின் அச்சத்தின் மத்தியில் எவ்வளவு காலத்துக்கு நடந்து செல்வது? எமது கிராமத்திலுள்ள பாடசாலையை தற்போதைய நிலையில் திறந்து வைக்கலாம்தானே? எனவே இதனைக் கருத்திற் கொண்டு சம்மந்தப்பட்டவர்கள் செயற்படல் வேண்டும் என்பது இக்கிராம மக்களின் முக்கிய கோரிக்கையாக இருக்கின்றது.

'ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு எழுமையும் ஏமாப் புடைத்து' என்பது, ஒரு பிறவியிலே தான் கற்ற கல்வியானது, ஒருவனுக்குத் தொடர்ந்து வரும் ஏழு பிறப்புக்களிலும் அவனைப் பாதுகாக்கும் சிறப்புடையது ஆகும். ஒரு மனிதனுக்கு அடிப்படையாக அமைந்துள்ள இந்தக் கல்வியயை, தற்காலத்தில் வழங்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் போரதீவுப்பற்றுக் பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகத்துக்கு உட்பட்ட போரதீவுப்பற்றுக் கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட பகுதியே 25 ஆம் கிராமமாகும். 1956 ஆம் ஆம் ஆண்டு கல்லோயா திட்டத்தின் கீழ் குடியேற்றப்பட்ட இக்கிராமத்தின் ஆரம்ப காலம் முதல், அக்கிராமத்தில் '25 ஆம் கொலனி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை' ஒன்று இயங்கி வந்துள்ளது.

பின்னர், அப்பாடசாலைக் கட்டடம் யுத்தகாலத்தில், 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் உடைத்து தகர்க்கப்பட்டதையடுத்து, அரசாங்கத்தால் புதிதாக பாடசாலைக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு, பாடசாலை இயங்கிவந்துள்ளது.

பின்னர், மீண்டும் 2002 ஆம் ஆண்டு திறக்கப்பட்டு, அங்கு தமிழ் பாடசாலையில் அங்குள்ள தமிழ், சிங்கள மாணவர்கள் ஒன்றுதொடக்கம் ஐந்தாம் ஆண்டு வரைக்கும் கல்வி கற்று வந்துள்ளனர். அதன் பின்னர் ஏற்பட்ட யுத்த சூழல் காரணமாக, மீண்டும் அப்பாடசாலை 2004 ஆம் ஆண்டு மூடப்பட்டு இன்றுவரை திறக்கப்படாமலேயே உள்ளது.

இக்கிராம மக்கள், யுத்த காலத்தில் பல முறை இடம்பெயர்ந்து, இடம்பெயர்ந்து பல இடங்களிலும் வாழ்ந்து வந்த நிலையில், மீண்டும் 2007 ஆம் ஆண்டு மீளக் குடியமர்ந்துள்ளனர். அக்காலத்தில், அங்குள்ள மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளும் முற்றாகப் பாதிக்கப்பட்டிருந்ததோடு அக்கிராமத்திலிருந்த பாடசாலையும் மூடப்பட்ட நிலையில் உள்ளது.

எனினும் அங்குள்ள மக்கள் மிகத் தொலைவிலுள்ள சங்கர்புரம், அம்பாறை மாவட்டத்திலுள்ள றாணமடு 11 ஆம் கொலனி, உள்ளிட்ட பாடசாலைகளுக்கு அடர்ந்த காட்டுப்பகுதியினூடாக, காட்டுயானைகளுக்குப் பயந்து பயந்து, குன்றும் குழியுமான கிரவல் வீதியூடாகச் சென்று கல்வி கற்று வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

> **25 ஆம் கிராம மக்கள் அப்பகுதியிலுள்ள மாணவர்களின் தொகை, தற்போது எங்கு சென்று, கற்கின்றார்கள்? அதற்கிடையிலான தூரம், உள்ளிட்ட விவரங்களை, கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளருக்கு எழுத்து மூலம் அனுப்ப வேண்டும்**

கோர யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு 12 வருடங்களைக் கடந்துள்ள போதிலும், இப்பாடசாலை திறக்கப்படாமை குறித்து அங்குள்ள மக்கள் பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில், குறித்த பாடசாலையை மீளத்திறப்பதாயின் அப்பகுதியில் தற்போதுள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை, தேவைகள் குறித்து தமக்கு எழுத்துமூலம் அறியத்தரும் பச்சத்தில், அது தொடர்பில் பரிசீலிக்கப்படும் என கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி. நகுலேஸ்வரி புள்ளநாயகம் தெரிவித்தார்.

எனவே, கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகத்தின் கருத்திற்கிணங்க, குறித்த 25 ஆம் கிராம மக்கள் அப்பகுதியிலுள்ள மாணவர்களின் தொகை, அங்குள்ள மாணவர்கள் தற்போது எங்கு சென்று, தமது கல்வித் தேவையைப் பூர்தி செய்கின்றார்கள்? அதற்கிடையிலான தூரம், உள்ளிட்ட விவரங்களை, கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளருக்கு எழுத்து மூலம் அனுப்பி வைக்கும் பட்சத்தில், அது எதிர்காலத்தில் நிறைவேற வாய்ப்புள்ளதாக அறியமுடிகின்றது. எனினும், அபிவிருத்தி குன்றிய நிலையில் காணப்படும் அப்பகுதி மக்களிடத்தில் மாத்திரம் இதனை விட்டுவிடாமல், அப்பகுதியைச் சேர்ந்த நலன் விரும்பிகள், சமூக ஆர்வலர்கள், துறைசார்ந்த அதிகாரிகள், அனைவரும் ஒன்றிணைந்து தூர்ந்துபோய்க் கிடக்கின்ற வித்தியாலயத்தை மீள இயங்கச் செய்து அப்பகுதி மாணவர்களிடத்திலும் ஒளியேற்ற அனைவரும் முன்வரவேண்டும் என்பதுவே அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.





தீர்வு காண வேண்டிய

# கிந்தோட்டை வாய்க்கால்



எம்.எஸ்.எம். மும்தாஸ்
4ஆம் வருடம், ஊடகக் கற்கைகள் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**காலி மாவட்டத்தில், கிந்தோட்டை பிரதேசத்தில் முக்கிய பிரச்சினைகளுள் ஒன்றாக, முறையாக கட்டியமைக்கப்படாத வாய்க்கால் அமைந்துள்ளது. இலங்கையின் தென்பகுதியின் கரையோரப் பகுதியை அண்மித்துள்ள காலி நகரின் கிந்தோட்டை பிரதேசம் கடலாலும், ஆறுகளாலும் சூழப்பட்டுள்ள ஓர் அழகிய கிராமமாகும்.**

காலி நகரின் அழகைப் பார்வையிடுவதற்கு உள்நாட்டவர்களும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளும் வருகை தருகின்றனர். இயற்கை அன்னையின் மடியில் தவழும் இந்நகரம் அடிக்கடி வெள்ளப்பெருக்குக்கு ஆளாக்கப்படுவதென்பதே தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டது. வெள்ளப்பெருக்கு ஏற்படக் காரணமாக அமைவதில் முறையாக கட்டியமைக்கப்படாத வாய்க்கால் வடிவமைப்பும் ஒன்றாகும்.

முறையாக ஒழுங்கு படுத்தப்படாத வாய்க்காலின் மூலம் காலி, கிந்தோட்டை பிரதேச மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். அவ் வாய்க்காலை சுற்றி வசித்து வருகின்ற கிந்தோட்டை பிரதேச மக்கள், அதிகமாக மழைக்காலங்களில் சூழல் சார்ந்த பிரச்சினைகளை முகங்கொடுத்து வருகின்றனர். காலாதிகாலமாக இது தொடர்கின்றது. இலங்கையின் ஏனைய இடங்களைப் போன்று ஒவ்வொரு பிரதேசங்களுக்கும் வடிகாலமைப்பு திட்டங்கள் , கழிவகற்றல் திட்டங்கள் மூலம் இதற்கு தீர்வு காண முடியும்.

ஆழம் குறைந்த, அகலமற்ற வாய்க்கால் ஆனது மஹஹபுகல, கிந்தோட்டை ( விதான கொடை சந்தியின்) அருகாமையில் ஐந்து வீடுகளுக்கு அப்பால் அமைந்துள்ளது. அப்பிரதேசத்தில் பல வீடுகளில் இருந்து வழிந்தோடக்கூடிய கழிவு மற்றும் மழை நீரானது முறையாக ஓரிடத்தைசென்றடையாது, தேங்கி நிற்கின்றது.

அவ்வாய்க்காலைச் சுற்றியுள்ள குடும்பங்கள் பல இன்னல்களை முகங்கொடுத்து வருகின்றன. குழந்தைகளும் வயோதிபர்களும் அப்பிரதேசத்தில் வாழ்ந்து வருகின்றனர். முறையாக கட்டி அமைக்கப்படாத வாய்க்காலின் நிலை தொடர்ச்சியாக இந்நிலையிலேயே இருக்குமாயின் அதனைச் சுற்றியுள்ள மக்கள் தீர்க்கப்படாத நோய்களுக்கு (டெங்கு) ஆளாகுவார்கள் என்பது நிச்சயம்.

மழைக் காலங்களிலும் வீடுகளில் இருந்தும் வழிந்தோட கூடிய கழிவு மற்றும் மழை நீரானது முறையாக நிர்மாணிக்காத இவ் வாய்க்கால் வழியாக வந்து வீடுகளிற்க்குள்ளும், வீட்டுக் காணிகளிற்குள்ளும், ஒழுங்கைகளிற்குள்ளும் சென்றடைகின்றது.

அவ்வாய்காலைச்சுற்றி சுமார் 45இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் அப்பிரதேசத்தில் வாழ்ந்து வருகின்றன. மழைக்காலங்களில் தண்ணீர் வெளியே செல்ல முடியாமல் அடைக்கப்பட்டும், தேங்கி நின்றும் வெள்ளம் போன்ற அனர்த்தங்களை முகம் கொடுக்க வேண்டிய நிலைக்கும் அப்பகுதி மக்கள் ஆளாக்கப்பட்டுள்ளனர்.

அப்பிரதேசத்தில் அடிக்கடி வெள்ளப்பெருக்கு ஏற்படுவதற்கான அறிகுறிகளில் ஒன்றாக ஒழுங்கற்ற வடிகால் மற்றும் வாய்க்கால் அமைப்பும் ஆகும். மேலும், வீடுகளிலிருந்து வழிந்தோடும் கழிவுநீர் வடிகாலினூடாக இவ் வாய்க்காலிற்க்கு அனுப்புவதனால் கழிவுநீரானது முறையாக சென்றடையாது தேங்கி நிற்கின்றது. இதனால் நுளம்புகள் பெருகும் அபாயத்தையும் அப்பிரதேச மக்கள் எதிர்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளனர்.

இவ்விடயம் குறித்து அப்பிரதேச வாசிகளில் ஒருவரான ஏ.ஜி.எம் ஹசன் கூறியதாவது; "இப்பகுதியில் சுமார் 45இற்கும்மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்றன. பழைமை வாய்ந்தஇவ்வாய்க்கால் இன்றுவரை கட்டப்படாமல் இருக்கின்றது. மழை நாள்களில் தண்ணீர் வெளியேறாமல் நிற்கிறது. இதனால் வெள்ளப்பெருக்கு ஏற்பட வாய்ப்புள்ளது. வாய்க்கால் நீர் வெளியேறாமல் தேங்கி, பள்ளக்காணிகளுக்குள் வழிந்தோடுவதுடன் வீடுகளிற்குள்ளும் தண்ணீர் வருகிறது. இதனால் சிறு பிள்ளைகள், தாய்மார்கள், வயோதிபர்கள் எனப் பலரும் சிரமப்படுகிறார்கள்" எனவும் கூறினார்.

மேலும், இவ்விடயம் குறித்து அப்பிரதேச வாசிகளில் இன்னுமொருவரான எம்.எச். எப். பஸ்மியா கருத்துக்கூறும்போது, "எங்களுடைய வீட்டுக்கு அருகாமையிலேயே இவ் வாய்க்கால் அமைந்துள்ளது. மழைக்காலங்களில் நீரானது பெருக்கெடுத்து வீட்டிற்குள்ளும் வீட்டுக்காணிகளுக்குள்ளும் வழிந்தோடுகின்றது. இதனால் நுளம்புகள் பெருகுவதுடன் வேறு பல தொற்றுநோய்களும் இதனால் ஏற்பட வாய்ப்புள்ளது. சிறு பிள்ளைகளும் முதியோர்களும் எங்களது வீட்டில் வாழ்ந்து வருகின்றனர். எங்களை இதில் இருந்து பாதுகாக்க வேண்டும்; அதற்காக இவ்வாய்க்காலின் ஊடாக வழிந்தோடும் நீரினை முறையாக ஓரிடத்தைச் சென்றடையச் செய்தல் வேண்டும். ஆகவே, இவ்வாய்க்காலினை ஆழமாக தோண்டி, கொங்றீட் இட்டு உரிய முறையில் கட்டியமைக்க வேண்டியதே எனது எதிர்பார்ப்பாகும்" எனத் தெரிவித்தார்.

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பார்கள். நோய் நொடிகள் இன்றி ஆரோக்கியமாகவும் சுத்தமாகவும் வாழ்வதற்கு சுற்றியுள்ள சுற்றுப்புறச் சூழல் சீரானதாக அமைய வேண்டும். சுற்றுப்புறச் சூழல் மாசடைவதால் மக்கள் ஆரோக்கியமற்ற வாழ்க்கைக்கே முகம்கொடுக்க நேரிடுவர். தேங்கி நிற்கும் நீரினால் சுற்றுப்புறச் சூழல் மாசடைகின்றமை குறிப்பிடத்தக்கது. நிலத்தடி நீரிலிருந்து மனிதன் குடிக்கும் தண்ணீர் வரை நீரானது மாசுபடுத்தப்படுகின்றது.

தற்போதைய உலக மக்கள் தொகையில் 33 சதவீதமானோர் அடிப்படைத் தேவைகளுக்கு தூய நீரைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளனர். 2025 ஆம் ஆண்டளவில் 60 சதவீதமானோர் நீரைப் பெறுவதில் சிரமங்களை எதிர்கொள்வர். அதிகமான பிரதேசங்களில் மேற்பரப்பு நீரையும் தரைக்கீழ் நீரையும் குடிப்பதற்கு பயன்படுத்த முடியாதுள்ளது. கழிவு பொருட்கள் நீரில் கலப்பதனால் நீர்வாழ் உயிரினங்கள், செடி கொடிகள் பாதிப்புக்குள்ளாகின்றன. ஆகவே முறையாக கட்டி அமைக்கப்படாத அவ்வாய்க்காலினால் இவ்வாறான சிக்கல்களையும் அப்பிரதேச மக்கள் எதிர்கொள்ள தலைப்படுவர்.

இவ்விடயம் தொடர்பாக, கிராம அதிகாரியான வை.பி. அபேநாராயனவிடம் கேட்டபோது அவர் கூறியதாவது; "மழைக்காலத்தில் நீர் வாய்க்கால் வழி செல்லாமல், மக்களது வீட்டு காணிகளுக்குள் புகுந்த நிலையில் மக்கள் படும் அவலங்கள் தவிர்க்க முடியாததாகும். வாய்க்காலினூடாக நீரானது தேங்கி நிற்காமலும், வெளிக்காணிகளுக்குள் உட்புகாமலும் இருப்பதற்கு நீர் வழிந்தோட கூடிய முறையான பாதையைக் கண்டறிந்து, அதன் மூலம் மழைநீரையும், கழிவு நீரையும் சென்றடையச் செய்ய வேண்டும். வாய்க்கால் புனரமைப்பு முறையாக அமைக்கப்படாமையால் கழிவு நீர் வாய்க்காலின் ஊடாக வழிந்தோடாமல் இருக்கிறது" எனக் கூறினார்.

மேலும், குறித்த பிரச்சினை சார்ந்து நடவடிக்கைகள் எடுத்ததாகவும் நீர் வெளியேறாமல் நிற்பதாகவும் குறித்த பிரச்சினைக்கு ஓர் நிரந்தரத் தீர்வைத் தருவதற்கு தன்னால் முடிந்த அனைத்து பங்களிப்பையும் செய்வதாகவும் கூறினார்.

குறித்த வாய்க்கால் சுத்திகரிக்கப்படாமல் இருப்பதால், அப்பகுதி மக்கள் பல்வேறுபட்ட இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருவதை அவதானிக்க முடிகின்றது. இவ்வாறு பலதரப்பட்ட பிரச்சினை ஒன்றிணைந்த அப்பகுதியில் கழிவு நீரானது தேங்கி நிற்பதுடன் இதற்கு எந்தவிதமான உரிய மாற்று நடவடிக்கைகள் ஏதும் செய்யப்படாத நிலைமைகாணப்படுகிறது.

எனவே, வாய்க்காலை சுத்தப்படுத்தி சரியான முறையில் பராமரிப்பினை மேற்கொள்ளும் பொருட்டு வடிகாலமைப்பு திட்டத்தினூடாக அரசாங்கமானது கொங்கிறீட் இட்டு உரிய முறையில் வாய்க்காலைக் கட்டியமைத்து புனர்நிர்மாணம் செய்யப்பட வேண்டும்.

மேலும், வாய்க்கால் சீர்கேட்டினால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைத்துக் கொள்ள உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியது கடமையாகும். அந்த வகையில் வாய்க்காலினுள் சேரும் குப்பைகளை தடுப்பதற்கு அவ்வாய்க்காலுக்கு அருகில் உரிய குப்பைத் தொட்டி அமைத்தல் வேண்டும். தங்களிடம் பண வசதி இல்லாததால் மாநகர சபையின் உதவியுடன் குப்பைத் தொட்டிகளை அமைத்தல் வேண்டும். தங்களுடைய குடியிருப்புக் காணிகள், அன்றாடம் போக்குவரத்து செய்யும் ஒழுங்கைகளிற்குள் மழைக்காலங்களில் நீர் தேங்கி வளவுக்குள் வருவதினால் அரசாங்கத்தினூடாக வாய்க்காலினை ஆழமாக தோன்றி கொங்றீட் இட்டு கட்டப்பட வேண்டும்.

வாய்க்காலினை உரிய முறையில் சுத்தப்படுத்துவது தொடர்பாகவும், வீடுகளிலிருந்து கட்டி வைக்கப்படும் குப்பை மூட்டைகளையும் சம்பந்தப்பட்ட சுத்திகரிப்பு நடவடிக்கைகள் சரியாக நடக்கின்றனவா? வீட்டு வாசல்களில் வைக்கப்படும் குப்பைகள் ஊழியர்களால் எடுத்துச் செல்லப்படுகின்றனவா? என சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கண்காணிக்க வேண்டும். வடிகலினூடாக வாய்க்கால் வழியாக நீர் தொடர்ச்சியாக ஓடிச் செல்ல வேண்டுமென்றால் அவ்வாய்க்கால் மறுபுனரமைப்பு செய்தல் வேண்டும்.

ஏனெனில் அவ் வாய்க்காலின் அமைப்பில் பிழையிருந்தாலே கழிவு நீர் சீராக வெளியேறாமல் தேங்கி மக்களது குடியிருப்புக்குள் வருகிறது. எனவே வாய்க்காலினை மறுபுனரமைப்பு செய்வதன் மூலம் இதற்கான சரியான தீர்வை எட்டமுடியும். மேலும், அப்பகுதி மக்களில் குறித்த பிரச்சினை சார்ந்து தாங்களும் அப்பிரச்சினைக்கு ஒருவகையில் காரணம் என உணரும் வகையில் அவர்களின் மனங்களில் விழிப்புணர்வை ஏற்படுத்தி, சிந்திக்கச் செய்து அவர்களின் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்துவதனூடாக இவ்வாய்க்கால் சார்ந்த பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைப் பெற முடியும்.

---



# திக்குவாய்க்கு தீர்வு என்ன?



வி.ரி. சகாதேவராஜா

பேச்சுத்திணறல் ஒருவரின் இயல்பு வாழ்க்கையில் பாரிய சவால்களை ஏற்படுத்துகின்றது. இதைப் பேச்சுத்திணறல் (Stuttering/ stammering) அல்லது பேச்சு கொன்னல் என்பார்கள். இதற்கு சிகிச்சை அவசியமென கிழக்கு பல்கலைக்கழக மருத்துவ பீட சிரேஸ்ட விரிவுரையாளரும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் விசேட குழந்தை நல வைத்திய நிபுணருமான டொக்டர் விஜி திருக்குமார் தெரிவித்தார்.

சிறுவரிடையே பரவலாகக் காணப்படும் திக்குவாய் அல்லது கொன்னல் தொடர்பாகக் கேட்டவினாக்களுக்கு அளித்த விளக்கங்கள் இங்கு தரப்படுகின்றன.

### கேள்வி: திக்கு வாய் என்றால் என்ன?

பதில்: திக்கு வாய் என்று பேச்சு வழக்கில் அழைக்கப்படும் பேச்சு தினறல் நோய், சிறியவர்களுக்கும் பெரியவர்களுக்கும் ஏற்படும். அதாவது, கோர்வையாகத் தொடர்ந்து பேசுவதில் சிரமம் ஏற்படுதலே பேச்சு தினறல் ஆகும்.

ஒரு சொல்லின் உச்சரிப்பை, ஒரு சொல்லைத் திரும்பத் திரும்ப கூறுதல்; பேச ஆரம்பிக்கும் போது அல்லது பேசிக் கொண்டிருக்கும் போது, இடையில் வசனம் தடைப்படல்; ஓர் உச்சரிப்பை நீட்டி உச்சரித்தல் என்பன இந்நோயின் பொதுவான அறிகுறிகள் ஆகும்.

### கேள்வி: இந்நோய் ஏற்படுவதற்கான பொதுவான காரணங்கள் என்ன?

பதில்: இந்நோய் வருவதற்குப் பலகாரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. 1. நரம்பு செல்கள் விருத்தி அடையும் போது ஏற்படும் தாமதம் அல்லது மாறுபாடு. இது *developmental stuttering* என அழைக்கப்படும். பொதுவாக 2-4 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்கு ஏற்படும்.

2. ஏதாவது ஒரு நோய் நிலைமை ஏற்பட்டதன் காரணமாக, பேச்சு தினறல் ஏற்படல். இது *Neurogenic stuttering* என அழைக்கப்படும். இதனை சிறியவர், பெரியவர் இருவரிலும் பொதுவாக அவதானிக்கலாம்.

3.மன ரீதியான அழுத்தங்களால் ஏற்படுதல்; அதாவது, திடீரென நிகழ்ந்த அதிர்ச்சியான அல்லது சோகமான ஒரு சம்பவத்தின் பின்னர், பேச்சு திணறல் ஏற்படல். இது *Psychogenic stuttering* என அழைக்கப்படும். இவ்வாறு சிறியவர், பெரியவர் இருவரிலும் நிகழலாம்.

### கேள்வி: இந்நோய்காக அறிகுறிகள் என்னென்ன?

பதில்: சிறுவனோ, சிறுமியோ தனக்கு பேச்சு கொன்னல் பிரச்சினை இருக்கு என்பதை உணர முன்னர், தொடர்பாடல்களை மேற்கொள்வதில் சிரமங்களை சந்திப்பார்கள்.

பேச்சு திணறல் ஏற்படும் போது, உடல் ரீதியாகவும் சில செயற்பாடுகளை வெளிப்படுத்துவார்கள். உதாரணமாக, கண்களை அதிகமாகச் சிமட்டல், கைகளை உதறல், அடித்தல் போன்றவையாகும்.

தனக்கு பேச்சு கொன்னல் குறைபாடு உள்ளதெனத் தெரிந்து கொண்டதன் பின்னர், இவர்கள் தங்களைப் பிறரிடம் இருந்து தனிமைப்படுத்திக் கொள்வார்கள். மற்றவர்களுடன் உரையாடத் தயங்குவார்கள்; பயப்படுவார்கள்.

இவர்களுக்கு உளரீதியான அழுத்தங்களும் அதிகரிக்கும்.



> **பேச்சுத்திணறல் ஒருவரின் இயல்பு வாழ்க்கையில் பாரிய சவால்களை ஏற்படுத்துகின்றது. இதற்கு சிகிச்சை அவசியமென கிழக்கு பல்கலைக்கழக மருத்துவ பீட சிரேஸ்ட விரிவுரையாளரும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் விசேட குழந்தை நல வைத்திய நிபுணருமான டொக்டர் விஜி திருக்குமார் கூறுகிறார்**

மேலும், பாடசாலையில் ஆசிரியர், சக மாணவர்களுடன் உரையாடத் தயங்குவார்கள். ஆர்வத்துடன் முன்வந்து பாடசாலையில் உள்ள ஏனைய செயற்பாடுகளில் கலந்துகொள்ள மாட்டார்கள். பொதுவாக, மேடைப் பேச்சுகள், கலை விழாக்களில் ஈடுபட மாட்டார்கள்.

தெரிந்தவர்களுடன் உரையாடும் போது கூட, கண்களைப் பார்க்காமல், அவதானிக்காமல் பேசி முடிப்பார்கள். பெரியவர்கள் தங்களது பேச்சு பிரச்சினையை மறைக்க, அதிகமாகத் தங்களைத் தாங்களே தனிமைப்படுத்துவார்கள்.

எந்த உச்சரிப்பில் திக்கு ஏற்படுகிறதோ, அதற்குப் பதிலாக வேறு இலகுவான சொற்களை பாவித்து பேச முயற்சிப்பார்கள்.

பிறருக்குத் தங்களை அறிமுகப்படுத்துவதிலும் சந்திப்பைத் தொடர்வதிலும் அதிகளவில் சிரமப்படுவார்கள். மன ரீதியான அழுத்தம் உடையவர்களாகவும் தன்னம்பிக்கை குறைந்தவர்களாகவும் இவர்கள் இருப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் காணப்படுகின்றது.

சிறுவர், சிறுமியர், தமக்குப் பேச்சுத்திணறல் இருக்கின்றது என்பதை உணர்ந்தால், பல விடயங்களில் தாழ்வுமனப்பான்மையு.டன் பின்னடிப்பார்கள்.

### கேள்வி: பேச்சுத் திணறல் நோய்க்கு சிகிச்சை இருக்கிறதா?

பதில்: பேச்சு திணறல் பிரச்சினை ஏற்படும் போது, உரிய நேரத்தில் வைத்தியரை நாடி, அவற்றுக்கான காரணங்களின் வகைகளைக் கண்டறிந்து, சிகிச்சை முறைகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும். இவற்றின் மூலமாக, சிறந்த முன்னேற்றகரமான விருத்தியை அவதானிப்பதுடன் மன அழுத்ததையும் குறைக்கலாம்.

திக்குவாய் ஒரு நோயல்ல; இது ஓர் இயலாமை என எண்ணிக்கொண்டு, உலகை வெற்றி கொள்ளும் ஆற்றல் என்னிடம் வந்துவிட்டது என்று திடமான நம்பிக்கை கொண்டால், இந்தப் பிரச்சினையை இலகுவில் தீர்த்துகொள்ள முடியும். உலகில் சாதனையாளர்களாக

> **பேச்சு திணறல் பிரச்சினை ஏற்படும் போது, உரிய நேரத்தில் வைத்தியரை நாடி, அவற்றுக்கான காரணங்களின் வகைகளைக் கண்டறிந்து, சிகிச்சை முறைகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும். இவற்றின் மூலமாக, சிறந்த முன்னேற்றகரமான விருத்தியை அவதானிப்பதுடன் மன அழுத்தையும் குறைக்கலாம்**

வாழ்வாங்கு வாழ்தவர்களில் பெரும்பாலானவர்களின் சிபராயத்தில் திக்குவாய் பிரச்சினையால் அவற்தைப்பட்டவர்களாகவே காணப்படுகின்றனர். இவர்களின் தொடர்ச்சியான, தடைகளைத் தாண்டிய பயிற்சிகளே .இவர்களை வெற்றியாளர்களாக மாற்றியது. மருத்துவ ஆலோசனையுடன் கூடிய முயற்சியும் பயிற்சியும் திக்குவாய் பிரச்சினைகளில் இருந்து விரைவில் சுகமடையச் செய்யும் வழிகளாகும்.



# சீனாவின் இராணுவத் தளமாக இலங்கை மாறும் என பென்டகன் எச்சரிக்கை

அமெரிக்க பாதுகாப்பு தலைமையகமான பென்டகன், நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை சீனா குறித்து முக்கிய அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. இலங்கையில் இராணுவத் தளம் அமைப்பது தொடர்பில், சீனா பரிசீலித்து வருவதாக, பென்டகனின் அந்த அறிக்கையில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

'சீன மக்கள் குடியரசை உள்ளடக்கிய இராணுவம் மற்றும் பாதுகாப்பு அபிவிருத்திகள்' என்ற தலைப்பில், வெளியிடப்பட்ட அறிக்கையில், இலங்கை உள்ளிட்ட சில நாடுகள், சீன குடியரசின் இராணுவத் தளங்களாக அல்லது வசதி வழங்கும் நிலையங்களாக மாறுவதற்கு, பெரும்பாலும் இடமுள்ளதாக பென்டகன் சுட்டிக்காட்டியுள்ளது.

சீனா, தமது இராணுவம், கடற்படை, விமானப்படை போன்ற படைகளின் பலத்தை, பரந்த பிரதேசத்தில் வலுப்படுத்திப் பேணும் நோக்கில், இலங்கை உட்பட 13 நாடுகளில் இராணுவத்துக்கு வசதி வழங்கும் நிலையங்களை ஸ்தாபிப்பதற்கு முயல்கின்றது. இலங்கையுடன் கம்போடியா, மியான்மார், தாய்லாந்து, சிங்கப்பூர், இந்தோனேஷியா, பாகிஸ்தான் உள்ளிட்ட 13 நாடுகளில், இந்த நோக்கத்துக்காகச் சீனா காலூன்றியுள்ளதாக பென்டகனின் புதிய பாதுகாப்பு ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக ஜோ பைடன் பொறுப்பேற்றதன் பின்னர், சீனாவுக்கு எதிரான அவரது நடவடிக்கைகள் பரந்தளவில் மிகநுணுக்கமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. "சீனாவின் கடுமையான போட்டியை சமாளிக்கும் வகையில், உங்களது நாடுகளைச் சேர்ந்த சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திக் கொள்வதற்காக அரசுகள் உதவ வேண்டும்" என்று ஜனாதிபதி பைடன், ஜி-7 அமைப்பு நாடுகளின் தலைவர்களிடம் வேண்டுகோள் விடுத்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

சீனாவின் உலக ஆதிக்கத்தை முறியடிக்க, அமெரிக்கா தலைமையிலான மேற்குலக நாடுகளும் ஜப்பான், அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து போன்ற நாடுகளும் ஓரணிதிரண்டு நிற்கின்றன.

ஆனால், சீனாவோ இவை எவற்றையும் பொருட்படுத்தாமல் தான் வகுத்த திட்டங்களின்படியே, உலகத்தைப் பொருளாதார ரீதியாக வசப்படுத்தும் முயற்சிகளில் இறங்கியுள்ளது.

கடன் கிடைத்தால் போதும் என்ற சூழலில் இருக்கும் நாடுகள், சீனாவின் மனோபாவத்துக்கு அடி பணியும் நிலைக்குத் தள்ளப்படுகின்றன.


இலங்கை இதற்கு நல்லதோர் உதாரணமாகும். சீனாவின் கடன்பொறிக்குள் சிக்கியுள்ள இலங்கை, ஹம்பாந்தோட்டை, கொழும்பு, வடக்கே தீவுப்பகுதிகள் எனப் படிப்படியாக இழந்துவருகின்றது.

பங்களாதேஸின் சிட்டகொங், இலங்கையில் கொழும்பு, பாகிஸ்தானில் க்வாதர் என தெற்காசியாவின் மூன்று முக்கிய துறைமுகங்கள் தற்போது சீனாவின் கைகளைச் சென்றடைந்து விட்டன.

இதேபோல், ஏடன் வளைகுடாவில் செங்கடலில் ஆபிரிக்காவையொட்டி அமைத்திருக்கும் ஜிபூட்டியில் ஓர் இராணுவத் தளத்தை சீனா அமைத்துக்கொண்டுள்ளது. இதன்மூலம் ஆபிரிக்கா, இந்துசமுத்திரம், தெற்காசியா ஆகிய மூன்று பகுதிகளின் கடல் ஆதிக்கத்தை தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும்.

இத்தகைய சீனாவின் நகர்வுகளால், இலங்கையில் சீனாவின் காலூன்றல் குறித்து, அமெரிக்கா மிகுந்த எச்சரிக்கையாகவே உள்ளது என்பதையே அண்மைய அமெரிக்க பாதுகாப்பு தலைமையகமான பெண்டகனின் அறிக்கையில் தெரியவருகின்றது. இந்த இரு வல்லரசுகளையும் இலங்கை, இராஜதந்திர ரீதியில் சாணக்கியமாக கையாள வேண்டும்.






## வாழ்வியல் தரிசனம்

பகைவன் என நீங்கள் கருதுபவர்களிடத்தில் இருக்கும் நல்ல குணாதிசயங்களைத் தேடி அறிவீர்களாக. முழுமையாக நீங்கள் வாழ்கின்றீர்களா என உங்களை நீங்களே கேட்பீர்களாக!

சில விடயங்கள் எதிர்பார்க்காமல் நடந்துவிடுகின்றன. தம்மாலான அபிப்பிராயங்களால் நட்பு அடைபட்டு விடுகின்றது. சிலசமயங்களில், உங்களால் ஒதுக்கப்பட்டவர்கள், உங்களை நினைத்துத் துன்பப்படலாம்.

சில கர்வ எண்ணங்களால் உறவுகள் பறிக்கப்படுகின்றன. வாழும் காலத்தில் நெஞ்சத்தில் கலவரம், தவறான எண்ணம், கருத்துகள் உருவாகலாகாது.

வாழ்வின் அர்த்தம் யாவரையும் இணங்குவதில் தங்கியுள்ளது. வெறுத்தலை விடுத்துச் சும்மா இருப்பது நல்லது. தொடரும் வெறுப்பை மறந்து விடுக. அதுவே, உங்கள் இதயத்தில் புதுஒளியைப் பாச்சும். தகாத பொய்களைச் சொல்லி எவரையும் பிரித்தல் ஆகாது. சமூகம் இணைந்தாலே பாரிய பலம் உண்டாகும். விலகி வாழ்ந்தால், எதையும் சாதிக்க முடியாது.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# இன்றைய நெருக்கடிகளுக்கு அரசாங்கம்தான் காரணமா?

லக்ஸ்மன்

நாட்டில் இன்று போல் நாளையில்லையென்பதால், நள்ளிரவில் எந்தப்பொருளுக்கு விலையேறும் என்று தெரிந்து கொள்வதிலேலேயே மக்கள் அக்கறை கொள்ளவேண்டிய நிலைமையொன்று உருவாகிவிட்டது. தட்டுப்பாட்டை ஏற்படுத்திவிட்டால் எதற்கும் விலையை ஏற்றிவிடலாம் என்ற நிலை கடந்த சில மாதங்கள் நிலவிய பால்மா தட்டுப்பாட்டினால் உருவானது. இது ஏனைய பொருள்களுக்கும் தொடர்கிறது. கறுப்புச் சந்தை நிலைமையிலேயே பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றன. கேட்கின்ற பொருளுக்கு வியாபாரி தீர்மானிப்பதே விலையாக இருக்கிறது. அந்தவிலைக்குப் பொருளைப் பெற நாம் தயாரில்லையென்றால் பொருளில்லை. தட்டுப்பாடும் விலை அதிகரிப்புமே வாழ்வாதாரத்தின் நிரந்தரமாகிவிட்டன.

அரசாங்கம், எங்களை அசைக்க முடியாது என்று மார் தட்டிக் கொள்வதற்கு முடியாவிட்டாலும் எல்லாச் சுமைகளும் அவர்கள் மீதே இருந்து கொண்டிருக்கிறது என்பதனை அவர்கள் தட்டிக்கழித்துவிட முடியாது. ஆனால் கொவிட் நிலைமை, உலகளவில் ஏற்பட்ட நிதி சார் நெருக்கடிகளுக்கப்பால் நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மையும் கேள்விக்குட்படுத்தப்பட்டு இருக்கிறது என்பதே உண்மை.

இதற்குள் மக்கள் சிக்குண்டு படும் இன்னல்களுக்கு அளவில்லை என்றே கூறமுடியும். வர்த்தகர்களும் பெருமுதலாளிகளும் மாத்திரமே நாட்டில் வாழுகின்றார்களா என்று கேள்வி கேட்கத் தோன்றுகிறது.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்று சிறிது காலத்தில் ஏற்பட்ட கொரோனா வைரஸ் பரவல் நிலையில் பாதிக்கப்பட்ட குறைந்த வருமானம் பெறும் மற்றும் இடர் நிலைமைக்குள்ளான குடும்பங்கள், நபர்களுக்கு மேலும் பல பண மற்றும் பொருள் நிவாரணங்கள் வழங்குவதாக வெளிவந்த அறிவிப்பினையடுத்து மக்கள் ஜனாதிபதி மீது வாழ்த்துகளைச் சொரிந்தனர்.

ஜனாதிபதியால் பிரகடனப்படுத்தப்பட்ட நிவாரணங்கள் மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்தும் விதம் குறித்து விளக்கும் சுற்றுநிருபமொன்றை ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி பீ.பி. ஜயசுந்தர வெளியிட்டார். புதிய கொரோனா வைரஸை இலங்கையிலிருந்து ஒழிக்கும் முன்னுரிமை நிகழ்ச்சித்திட்டம் நிறைவுற்றதாக அறிவிக்கும் வரை இந்த நிவாரணங்கள் தொடர்ச்சியாக அமுலில் இருக்கும் என்றும் அறிவித்திருந்தார்.

ஆனால், அந்த அறிவிப்பு ஒரு சில மாதங்களிலேயே நின்று போனது. கொவிட் தொற்றுக்குள்ளாகின்றவர்களுக்கும், அவர்களது குடும்பங்களுக்கும் வழங்கப்பட்ட நிவாரணப் பொதியும் நின்று போனது. கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக இந்த வருடத்தின் ஆரம்பத்திலிருந்து ஒவ்வொரு பொருளுக்கும் விலையேற்றம் நடைபெற ஆரம்பித்தது. அந்த ஆரம்பம் முதலாளிகளுக்கும் வர்த்தகர்களுக்கும் ஆரோக்கியமானதாக இருந்தது என்றுதான் சொல்லிக் கொள்ள வேண்டும்.

எரிபொருளுக்கான விலையேற்றமானது அனைத்து பொருட்களுக்குமான விலையேற்றத்தினை அங்கிகரிப்பதற்குச் சமமானது. அந்தவகையில் ஒவ்வொரு பொருளாக விலையை ஏற்றிக் கொண்டன. கடந்த வருடத்தில் உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்கிறோம் என்ற பெயரில் தட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்ட மஞ்சள், உழுந்து போன்றவைகளுக்கும் கடலை, கௌப்பி, பயறு போன்ற தானியங்களுக்கும் ஏற்பட்ட விலையேற்றம் மிகப்பாதகமானதாகவே இருக்கிறது. அது பதுக்கல்களுக்கும் கடத்தல்களுக்கும், சட்டவிரோதமான விற்பனைக்கும் அடிகோலியது. அதனால் சட்டவிரோதமாக நாட்டுக்குள் வரும் தொன்கணக்கான மஞ்சள் எரித்து அழிக்கப்பட்டு வருகிறது.

எது எப்படியானாலும், எப்படியோ மக்களை போசணையற்ற, சக்தியற்றவர்களாக்கும் முறைமை ஒன்று உருவாக்கப்பட்டிருக்கிறது என்றே சொல்ல வேண்டும். போசணை உடைய நாட்டு மக்களை கொண்டிருக்க வேண்டிய அரசாங்கம் உணவுச் சுருக்கத்துக்கான வழியை அவர்களுக்குச் சொல்லிக் கொடுத்தது.

நியூயோர்க்குக்கும், ஸ்கொட்லாந்துக்கும் சென்றிருந்த ஜனாதிபதி நாட்டின் பெருமைகளைப் பெருமையாகச் சொல்லி வந்தார். அந்தப் பெருமையின் பூரிப்பில் மக்களுக்கு விலையேற்றம் என்ற பரிசே வழங்கப்படுகிறது. நியூயோக்கிலிருந்து நாடு திரும்பியதும் அரிசியின் விலையைப் பார்த்துக் கொள்ளவா ஜனாதிபதியாக்கினீர்கள் என்று கேட்டது போன்று ஸ்கொட்லாந்திலிருந்து திரும்பி பொருள்களின் விலைக்கட்டுப்பாடா எனது வேலை என்று கூடக் கேட்க வாய்ப்பிருக்கிறது.

ஏனென்றால், அத்தியாவசியப் பொருள்களுக்கான கட்டுப்பாட்டு விலைகள் வாபஸ் பெறப்பட்டுவிட்டன. இதன் மூலம் யாரும் எந்த விலையிலும் பொருள்களை விற்கலாம் என்ற நிலைமை உருவாகியிருக்கிறது. விவசாய நடவடிக்கைகளுக்கன இரசாயன உரம், கிருமிநாசினிகளின் இறக்குமதி நிறுத்தப்பட்டதனால் இம்முறை விவசாய நடவடிக்கை அதள பாதாளத்துக்குச் செல்லவிருக்கிறது. இதன் பாதிப்புக்களைத் தடுப்பதற்கு அரசாங்கத்திடம் எந்த வழியும் இருப்பதாகத் தெரியவில்லை இருந்தாலும் நாட்டின் இயற்கை விவசாயம் தொடர்பில் ஜனாதிபதியும் அரசாங்கமும் பேசுகின்றனர்.

அத்தியாவசியம் அநாவசியமாகிவிட்டது. அத்தியாவசியப் பொருள்கள் என்று எதுவுமில்லை. அதன் விலைகள் அரசாங்கத்தின் கையிலோ கட்டுப்பாட்டிலோ இல்லையென்றால் சாதாரண அடிமட்ட மக்களும், ஏழை மக்களும், அரச தொழில்களை நம்பி வாழும் மக்களும் உணவுக்கு என்ன செய்வது என்பது இப்போதைய மிகப்பெரும் கேள்வி.

இந்த இடத்தில்தான் நாட்டில் ஏற்பட்டிருக்கும் சிக்கலான நெருக்கடிக்கு யார் பொறுப்பு என்ற கேள்வி எல்லோருக்கும் எழுகிறது. இது வெறுமனே உலக சந்தையில் உருவான விலையேற்றத்தின் பலன் என்று ஒரு சொல்லில் சொல்லிவிட்டு நாம் மௌனமாகிவிடமுடியாது. நாட்டில் பொருள்களின் விலையேற்றம் பணத்தின் பெறுமதிக் குறைவு, பொருளாதார வளர்ச்சி போன்றவை மத்தியவங்கியினால் கட்டுப்படுத்தப்படவில்லை. கட்டுப்படுத்த முடியவில்லை. மேலும் பல நிதியியல் ரீதியான நெருக்கடிகள் உருவாகிக் கொண்டிருந்த நிலையில் மத்திய வங்கியின் ஆளுனர் பதவி விலகி புதிய ஆளுனராக முன்னை ஆளுனரும் இராஜாங்க அமைச்சருமான அஜித் நிவாட் கப்ரால் நியமிக்கப்பட்டார்.

அவரது நியமனத்தின் பின் நாட்டில் நிதிவளம் அதிகரிக்கும் மக்களின் நிதிப்பிரச்சினைக்கு சுமூகமான தீர்வு கிடைக்கும் என்று எதிர்பார்த்தவர்களுக்கு புதிய நாணயத்தாள்கள் அச்சடிக்கப்பட்டதாக தகவல்கள் வெளிவந்ததே தவிர வேறு பயன் ஒன்றுமில்லை.

நாட்டில் ஆட்சியிலிருக்கும் ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுன கூட்டணி கலைந்துவிடுமோ என்று எல்லோரும் அச்சப்படுமளவிற்குப் பிரச்சினைகள் வலுப்பெற்றுவிட்டன. ஆனால் தமக்குள்ளும் தமது கூட்டணிக்குள்ளும் எந்தப்பிரச்சினையும் இல்லையென வெளிப்பூச்சில் சொல்லிக்கொள்கிறார்கள். எதிர்க்கட்சியினர் நாட்டை நடத்த முடியாவிட்டால் வெளியேறுங்கள் என்று பகிரங்கமாக அறிவிக்கிறார்கள். இவையெல்லாம் நாட்டின் நன்மைக்காகவா என்று நம் போன்ற மக்கள் கேட்க மாத்திரமே முடிகிறது.

பெருமையுடன் சுபீட்சத்தை நோக்கி எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஐந்தாவது தேசிய மாநாட்டில் உரையாற்றிய பெரமுனவின் தலைவரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ, சுவர்களில் ஓவியங்களை வரைந்து அரசியலினால் நாட்டை அசிங்கப்படுத்த வேண்டாம் என்று கூறிய இளைஞர்கள் இன்று நாட்டை விட்டு வெளியேறுவதற்காக கடவுச்சீட்டு பெற்றுக் கொள்ள வரிசையில் நிற்கின்றனரா என்பதை கண்டறிந்து அவர்களை மீண்டும் இந்நாட்டிற்கு கொண்டுவரக்கூடிய அரசியலில் ஈடுபடுவதே பொதுஜன பெரமுனவிற்குள்ள வரலாற்று எதிர்கால பணியாகும் எனத் தெரிவித்திருக்கிறார்.

இந்த நிலைமை ஏன் உருவானது என்பது அவருக்கும் அரசாங்கத்திற்கும் தெரிந்திருந்தாலும் ஏன் அவ்வாறான கருத்தை அவர் வெளியிடவேண்டிய நிலை உருவாகிறது என்பதுதான் கேள்வி. உண்மையில் விலையேற்றங்களால் வாழ்க்கை மீது ஏற்பட்டிருக்கும் சுமையே அவர்களை நாட்டைவிட்டு வெளியேறத் தூண்டுகிறது.

மக்களுக்காக அரசியலே தவிர அரசியலுக்காக மக்களல்ல. ஆனால் நமது நாட்டினைப் பொறுத்தவரையில் பௌத்த ஆதிக்கம், சிறுபான்மை மக்களை அடக்குதல், அவர்களுக்கெதிரான நடவடிக்கைகள், கைதுகள், சட்ட நடவடிக்கைகள் என நெருக்கி சிங்கள மக்களை ஒரு பெரும்பான்மை இனவெறிச் சிந்தனையில் வைத்துக் கொண்டு அரசியலுக்காக மக்கள் என்று ஒருபுறம் பிரமிப்புக் காண்பிக்கப்படுகிறது.

ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியில் அரசியலை ஆரம்பித்த மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதியாக இருந்த தன்னுடைய அதிகார வீழ்ச்சியை தூக்கி நிறுத்திக் கொள்வதற்காக பொதுஜன பெரமுன என்ற ஒரு கட்சியை அமைத்து அதன் ஐந்து வருடத்தினை நிறைவு செய்திருக்கிறார். இப்போது நாட்டில் அரசாங்கமும் ஜனாதிபதியும் ஒரு கட்சியைச் சேர்ந்தவர்களாக இருக்கின்ற போதும் நெருக்கடிகளைச் சமாளிக்க முடியாதிருக்கிறது. ஜனாதிபதி ஒரு புறமும் பிரதமர் ஒருபுறமும் இருக்கின்ற ஆட்சிகளுக்கான வரலாறுகள் இலங்கையில் பல இருந்தாலும் அதற்கு, சந்திரிகா - ரணில், மைத்திரிபால - ரணில் ஆட்சிகள் சிறப்பான உதாரணங்களாகும். ஆனால் இப்போதிருக்கின்ற ஆட்சி அதனைவிடவும் பிரச்சினையானதா என்று மக்களிடம் சிந்தனை ஏற்பட காரணமாக இருக்கிறது.

உலகின் கொவிட் பரவல் சிக்கலுக்குள் இருந்தாலும் நாட்டில் ஒரு பலமான எதிர்கட்சி இன்மை இந்த இடத்தில் பெரும் குறைபாடாகவே இருக்கிறது. ஈஸ்டர் தற்கொலை குண்டுத் தாக்குதல் போன்ற விடயங்களால் மக்களிடம் உருவான எதிர்ப்பலை காரணமாக ஏற்பட்ட ஆட்சிமாற்றமானது நாட்டில் ஒரு பலமான எதிர் அணியை இல்லாமலாக்கிக் கொண்டது.

எதிரணியில்லாமை, மக்களின் தம் வாழ்க்கை மீதான நம்பிக்கையின்மை, மக்களின் எழுச்சியின்னை போன்றவைகளுக்குள் நம் நாட்டின் எதிர்காலம் அரசியலாகவே இருக்கப்போகிறதா என்பதைக்காணப் பொறுத்திருப்போம்.

## கடிதங்கள்

### கொக்குத்தொடுவாயில் காட்டு யானைகள் அட்டகாசம்

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குத்தொடுவாய் வடக்கு கிராமத்துக்குள் புகுந்த காட்டு யானைகள், ஒரே இரவில் 300 வரையான தென்னம்பிள்ளைகளை அழித்துள்ளன.

கொக்குத்தொடுவாய் வடக்கு கிராம மக்கள், 1984 ஆம் ஆண்டு, அனர்த்தம் காரணமாகத் தங்கள் வாழிடங்களை விட்டு வெளியேறினார்கள். இதன்போது, அவர்களின் வாழிடங்களில் இருந்த வான்பயிர்கள் முற்றாக அழிக்கப்பட்ட நிலையில், 2012 ஆம் ஆண்டு மீள்குடியேற்றப்பட்ட போது, எதுவித வளங்களும் இல்லாத நிலையில், தங்கள் காணிகளைத் துப்புரவு செய்து தென்னங்கன்றுகளை நாட்டி வைத்துள்ளார்கள்.

வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் பகுதியின் அருகில் அமைந்துள்ள இந்த மக்களின் விவசாய செய்கை, காட்டு யானைகளால் பெரிதும் பாதிக்கப்படுவதாக கவலை தெரிக்கிறார்கள். நிலக்கடலைசெய்கை, தெங்கு செய்கைக்கு உகந்த நிலமாகக் காணப்படும் இக்கிராமத்தில், காட்டுயானைகளின் தொல்லை நாள்தோறும் அதிகரித்து வருகின்றன.

கடந்த இரண்டு நாள்களாக, கிராமத்துக்குள் புகுந்த காட்டுயானைகள் சுமார் 300 வரையான தென்னம்பிள்ளைகளை அழித்து நாசம் செய்துள்ளன.

தென்னம் பிள்ளைகளை நாட்டி 10 ஆண்டுகள் கடந்து, அவற்றில் இருந்து பயனைப் பெறும் தறுவாயில், காய்க்கும் மரங்களை விழுத்தி, பாளை தள்ளவுள்ள மரங்களின் குருத்தைப் பிடுங்கியுள்ளன. தங்கள் கிராமத்துக்குக் காட்டுயானையில் இருந்து பாதுகாக்க, யானை வேலியை அமைத்துத்தர அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். இவ்வாறு நாளாந்தம் இழப்பைச் சந்தித்துவரும் தெங்கு செய்கையாளர்களுக்கு அரசாங்கம் இழப்பீட்டினை பெற்றுத்தரவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

–செ. கீதாஞ்சன்



# கிண்ணியா பாலமும் ஆழ்கடல் மீன்பிடியும்



அ. அச்சுதன்

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள 11 பிரதேச செயலகப்பிரிவில், கிண்ணியா ஒரு பிரதேச செயலக பிரிவாகும். திருகோணமலை மாவட்டத்தின் தெற்குப் பக்கமாக, திருகோணமலை நகரில் இருந்து சுமார் 16 கி.மீ தொலைவில் கிண்ணியா அமைந்துள்ளது.

146.9 சதுர கி.மீ பரப்பளவை கொண்ட கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவானது, அதன் வட எல்லையாக தம்பலகாமம் குடாவையும் மேற்கு எல்லையாக தம்பலகாமம் பகுதியையும் தெற்கு எல்லையாக கந்தளாய் பகுதியையும் கிழக்கு எல்லையாகக் கொட்டியாரக்குடா மூதூர் பகுதியையும் கொண்டுள்ளது.

31 கிராம சேவகர் பிரிவுகளையும் 99 கிராமங்களையும் கொண்டமைந்துள்ள கிண்ணியாவில் இரண்டு உள்ளூராட்சி சபைகள் காணப்படுகின்றன. கிண்ணியா நகர சபை, கிண்ணியா பிரதேச சபை என்பனவே அவையாகும்.

கிண்ணியா நகரசபை 17 கிராம சேவையாளர் பிரிவுகளையும் கிண்ணியா பிரதேச சபை எஞ்சிய 14 கிராம சேவையாளர் பிரிவுகளையும் கொண்டுள்ளது. கிண்ணியாவை கொழும்பிலிருந்து B5 வீதியால் தம்பலகாமம் ஊடாக அடையமுடியும். மேலும், திருகோணமலையிலிருந்து A 15 வீதியால் சீனக்குடா ஊடாகவும் அடையமுடியும். சீனக்குடாவையும் கிண்ணியாவையும் இணைக்கும் கிண்ணியா பாலம் இலங்கையின் மிகவும் நீளமான கடல் மேல் பாலம் என்ற சிறப்பை பெறுகின்றது.

பாலம் அமைந்த இப்பகுதி, இயற்கையின் ரம்மியங்கள் நிறைந்த பகுதியாகும். பாலத்தையை அண்டிய பகுதியில், சிறுசிறு தீவுகள் அழகு தருகின்றன. பாலத்தின் வடிவமைப்பு மேலும் சிறப்பை தருகின்றது. பாலத்தைக்கடந்து செல்வோரை, ஒரு முறை இறங்கவைத்து, 'செல்பி' ஒன்றைப் படம் பிடிக்காமல் முன் நகர மனம் இடம் கொடுக்காது.

அது மட்டுமல்லாமல், இப்பாலம் கிண்ணியாவுக்கு அழகு சேர்க்கும் விதத்தில் அமைந்துள்ளது. இக்கடல் பகுதியில் மீன் இனங்கள், தமது இனப்பெருக்க இடமாகப் பயன்படுத்திக் கொள்ள ஏற்ற சூழல் காணப்படுகின்றது.

கிண்ணியா பிரதேசத்தில் முழு நிலப்பகுதியும் சமதரையான தோற்றத்தில் காணப்படுவதுடன், தென்மேற்கு பகுதியில் சிறிய உயர்வு காணப்படுகின்றது. இங்கு முக்கிய மூன்று ஆறுகளான மாகாவலி கங்கையின் ஒரு கிளையும், உப்பாறு, கேணிஆறு என்பன பாய்ந்தோடுவதுடன் கிழக்கு, வடக்கு பகுதிகளில் பல்வேறு உப நதிகளும் ஊடறுத்து ஓடுகின்றன. பின்கான் உடைந்த ஆறு, வடிச்சல் ஆறு, பனிச்சடி ஆறு போன்ற பருவகால ஆறுகளும் காணப்படுகின்றன.

வடக்குப் பகுதி முழுவதும் கட்டடங்களையும் (கிண்ணியா நகரம்) வடிகால்களையும் கொண்ட பகுதியாகும். மேலும், பல சிறிய நீர்த்தேக்கங்களும் இப்பகுதிக்கு அழகு தருகின்றன.



குரங்கு பாஞ்சான் நீர்த்தேக்கம், மணியரசன் குளம் ஆகிய நீர்த்தேக்கங்களிலிருந்து நெற்பயிர்ச்செய்கைக்கான நீரைப் பெற்றுக் கொள்வதுடன் மீன்பிடித்தலுக்கும் இந்நீர்த்தேக்கங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

கிண்ணியாவின் மத்திய பகுதியும் மேற்குப் பகுதியும் விவசாய நிலங்களாக காணப்படுகின்றன. தென் மேற்குப் பகுதியின் சிறிய நிலப்பகுதியில் காடுகள் காட்சி தருகின்றன.

கிண்ணியாவின் கரையோரப் பகுதியானது, கடலாலும் மணல் மேடுகளாலும் சூழப்பட்டுக் காணப்படுவதுடன் பருவகாலப் பகுதியின் கடல் அரிப்புகளால் பாதிப்புக்கு உள்ளாகின்றது.

கிண்ணியா பிரதேசத்தின் வாழ்வாதாரங்களாக விவசாயம், மீன்பிடி, சிறு கைத்தொழில், சிறு வியாபாரம் என்பன அமைந்துள்ளன. அத்தோடு ஒரு சிறு தொகையினர் அரசாங்க, தனியார் துறைகளில் கடமை செய்வதனூடாக தங்களுடைய வாழ்வாதாரத்தை பெற்றுக்கொள்கின்றனர்.

குறிப்பாக, மத்திய கிழக்கில் பணிபுரியும் பெண்களின் வருமானம், கிண்ணியாவின் வாழ்வாதாரத்துக்கு முக்கிய பங்கும் வகிக்கின்றது. இங்கு 39 சதவீதமான மக்கள் விவசாயத்துறையை தமது வாழ்வாதாரமாக கொண்டுள்ளனர் என்பது பிரதான அம்சமாகும்.

கிண்ணியா நகர, பிரதேச சபைப் பிரிவின் கடற்கரை ஓரம், கிட்டத்தட்ட 16 கி.மீ ஆகும். இது சூரங்கல் ஆற்றிலிருந்து கங்கை வரையிலான பகுதி ஆகும். இக்கரையோரப் பகுதியின் பெரும் பகுதி, மணல் கடற்கரையைக் கொண்டமைந்த பகுதியாகும். இங்கு பாறைகளோ பாறைத்தலைமுகங்களோ கிடையாது. ஆனால், அதிகமான சேற்றுத் திடல்களை காணலாம்.

இக் கரையோரப் பிரதேசங்களில் சில பகுதிகள் மட்டும், மண்ணரிப்புத் தாக்கத்துக்கு உட்பட்டுள்ளன. ஏனைய பிரதேசங்கள், அதிகளவான மண்ணரிப்புத் தாக்கத்துக்கு உட்படவில்லை. காரணம், இங்கு காணப்படும் கண்டல் தாவரங்களாகும். இவை சுனாமியின் போது, பாதுகாப்பரணாக இருந்து, உயிர்களை பாதுகாத்துள்ளன. இதற்கு பெரியாற்று முனை, நல்ல உதாரணம் ஆகும்.

கரையோரப் பிரதேசத்தின் முக்கியமான வாழிடங்களாக, கழிமுகங்களும் களப்புகளும் காணப்படுகின்றன. தாவரம், விலங்குகள் போன்ற உயிரினங்களின் பல்வகைத்தன்மைக்கு கழிமுகங்களும் களப்புகளும் மிக முக்கியமானவையாகக் காணப்படுகின்றன.

கழிமுகங்கள் கடலுடன் சுயாதீனமான தொடர்புடையவையாகும். இத் தொடர்பானது வருடம் முழுவதும் தொடர்ச்சியானதாகவும் இருக்கலாம்; அல்லது, இடை விட்ட தொடர்புடையதாகவும் இருக்கலாம்.

இதேவேளை, களப்புகள் நீண்டகாலமாக கடலுடன் தொடர்பற்ற நிலையில் காணப்படும். கிண்ணியா பிரதேசத்தில் மொத்தமாக ஆறு கழிமுகங்கள் காணப்படுகின்றன. அவையாவன: சிவத்தபால் ஓடை, போலகோடை ஆறு, செம்பியன் ஆறு, பெரியாற்று முனை ஆறு, கட்டை ஆறு, உப்பாறு, கங்கை ஆறு ஆகியனவாகும்.

இக் கழிமுகப்பிரதேசங்கள், கடல் வாழ் உயிரினங்கள் வாழ்வதற்கு உகந்த இடங்களாகக் காணப்படுகின்றன. மீன் வகைகளான கொடுவா, செப்பலி, ஓட்டி, ஓரா, கயல் மீன் என்பனவும் இறால், நண்டு வகைகளும்



மட்டியினங்களும் பிடிக்கப்பட்டும் அகழப்பட்டும் வருகின்றமையைக் காணலாம்.

கிண்ணியாவை அண்மித்த கடலில் பல தீவுகள் காணப்பட்டாலும், மிக அருகில் காணப்படும் தீவுகளில் ஒன்றாக கிண்ணியா பேத்தீவு காணப்படுகின்றது. இது கடற்கரையிலிருந்து 300 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. கடலின் ஒரு சிறு தீவாக குடியிருப்பற்ற இடமாக இருப்பதால், இங்கு மனித வாழிடத்துக்குச் சாத்தியமற்றுக் காணப்பட்டாலும் கடல் வாழ் உயிரினங்கள் அதிகமாக வாழக்கூடிய இடமாக இத்தீவு அமைந்து காணப்படுகிறது.

இத்தீவில், பல வடிவங்களை உடைய கற்களான முற்றுக்கல், முட்டை வடிவான கல், தட்டைக்கல், சிறுகல் போன்றனவும் கடற்கரைக்கு அருகில் உள்ள கற்கள் வற்றுக்காலங்களில் அதன் முனைப்பகுதி வெளித்தெரிவதுடன் அப்பாறைகளைச் சுற்றி கற்காய், ஏரல் (இது கடலிலுள்ள தீவுக்கற்களைப் பற்றிப்பிடித்து வளர்கின்றது), மீனினங்களும் காணப்படுகின்றன. இத் தீவுக்கருகில் மீனுக்குரிய உணவுவகைகள் அதிகமாக இருப்பதால் மீனினங்களின் உற்பத்தி பெருமளவில் காணப்படுகின்றன. இத்தீவைச் சுற்றி, மீனவர்கள் வள்ளங்களின் தூண்டில், மீன்கூடுகள் போன்றவற்றை பயன்படுத்தி, மீன்களை பிடிக்கின்றனர்.

பல சிறப்பம்சங்களைக் கொண்டு காணப்படுகின்ற இத்தீவைப் பேத்தீவு என்று அழைத்து வருகின்றனர். இவ்வாறு அழைப்பதற்கான காரணம், இத்தீவில் ஆரம்ப காலத்தில் பேய்கள் நடமாடுவதாகவும் அப்பகுதிக்கு சென்றால் பேய்கள் பிடித்துவிடும் என அச்சமூட்டி தடுக்கப்பட்டதாகவும் வாய்வழித் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவ்வாறான நம்பிக்கையின் விளைவாக, அன்று தொடக்கம் இன்றுவரை, இத்தீவு 'பேத்தீவு' என பெயர் சூட்டி சிறப்பிக்கப்படுகின்றது.

இந்த நிலையில், கிண்ணியா பிரதேசத்தில் ஆரம்ப காலப்பகுதியிலிருந்து ஆழ்கடல் மீன்பிடியில் சுமார் 1,500 இற்கும் மேற்பட்ட மீனவர்கள் ஈடுபட்டு வருகின்ற போதிலும் இங்கு மீன்பிடித் துறைமுகங்களோ, நங்கூரமிடும் தளங்களோ, ஏனைய மீன்பிடித்துறையை அபிவிருத்தி செய்யும் உட்கட்டுமான அபிவிருத்தித் திட்டங்களோ நடைமுறையில் இல்லை. இதனால் ஆழ்கடல் மீன் பிடித் துறையானது, பின்தங்கிய நிலையிலேயே இன்றும் காணப்படுகின்றது.

இதனால், மீனவர்கள் எதிர்பார்க்கும் வருமானத்தை அவர்களால் பெறமுடியாமல் இருக்கின்றது. பல்வேறு கஸ்டங்களை மீனவர்கள் தினமும் இதனால் எதிர் நோக்குகின்றனர். சந்தை வாய்ப்பும் பாதிப்படைகின்றது. இந்த நிலை, மீனவர்களின் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாகவே அமைக்கின்றது.

திருகோணமலை மாவட்டத்தில், கிண்ணியா பிரதேசத்தில் இருந்து பல அரசியல்வாதிகள் மக்கள் பிரதிநிதியாக இருக்கின்ற போதும், இன்று வரை மீனவர்களின் இது போன்ற பல பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படாமல் இருப்பது ஏன் என்ற கோள்வியும் எழுகின்றது. இனியாவது மீனவர்கள் விடயத்தில், மக்கள் பிரதிநிதிகள் கவனம் எடுப்பார்களா?



டேனியல் பெர்னாண்டோ
(Blue Resources Trust இன் கடற்றொழில் மற்றும் கொள்கை நிகழ்ச்சித் திட்டத்தின் இணை ஸ்தாபகரும் பணிப்பாளரும்)



# ஆனைத்திருக்கைக்கும் கொம்புத் திருக்கைக்கும் ஆபத்து

**ஆனைத்திருக்கை மற்றும் கொம்பு திருக்கை போன்றன, எமது சமுத்திரத்தில் காணப்படும் மிகவும் வித்தியாசமான மற்றும் கவரக்கூடிய மீன் வகையாக அமைந்துள்ளன. அவற்றின் பெயரைப் போலன்றி, முற்றிலும் ஆபத்தை ஏற்படுத்தாதவையாக உள்ளன.**

தமது தலைப்பகுதியின் மேல் காணப்படும் கொம்பு போன்ற *cephalic fins* ஐ பயன்படுத்தி, வாயினுள் நீரை உறிஞ்சி, செவிள் தட்டுகளினூடாக கடத்துகின்றன. இதனால், இவை வடிகட்டியாக அமைந்திருப்பதுடன், சிறு துணிக்கை வகையான உயிரினங்களை பிடித்து, அவற்றைப் பிரதான உணவாகக் கொள்கின்றன.

துரதிர்ஷ்டவசமாக, இந்தச் செதிள்கள், கிழக்கு ஆசிய சந்தைகளில் நோய் நிவாரணியாக அதிகளவு விற்பனை செய்யப்படுகின்றன. பெருமளவான நோய்களுக்கு நிவாரணமளிப்பதாக தெரிவிக்கப்படுகின்றன. இவ்வாறான கூற்றுகளுக்கு விஞ்ஞான ரீதியான ஆதாரங்கள் எதுவுமில்லை. மாறாக, இந்தச் செதிள்களில் அதிகளவு ஆசனிக் போன்ற உலோகப் பதார்த்தங்கள் காணப்படுவதுடன், அளவுக்கதிகமாக உள்ளெடுக்கப்பட்டால் ஆபத்தை ஏற்படுத்தும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய சுறாக்கள், திருக்கை போன்ற மீன் இனங்களைப் போன்று, ஆனைத்திருக்கை, கொம்பு திருக்கை போன்றனவும் குறைந்த வாழ்க்கைச் சுழற்சியைக் கொண்ட, விசேட மீன் வகையாகும். இதில் பெரிய வகையாக அமைந்துள்ள ஆனைத்திருக்கை, 40 வருடங்கள் வரை உயிர் வாழக்கூடியது. முதிர்வு நிலையை எய்த 15 வருடங்கள் செல்லும். ஒவ்வொரு மூன்று முதல் ஏழு வருடங்களுக்கு ஒரு தடவை ஒரு குஞ்சை ஈனுகின்றன.

எமது முழுமையாக பாதுகாக்கப்பட்ட யானைகளைப் போன்று, இவற்றின் வாழ்க்கை சுழற்சியும் பொதுவானதாக அமைந்துள்ளது. சூரை மீனைப் போன்று வருடாந்தம் பல தடவைகள் ஆயிரக் கணக்கான அல்லது மில்லியன் கணக்கான முட்டைகளை இடுவதைப் போன்று அல்லாமல், இவற்றின் வாழ்க்கை வட்டம் மெதுவானதாக காணப்படுவதால், இவற்றின் மீது வெளியக அழுத்தம் ஏற்படுத்தப்படுமானால், அவற்றின் தொகை குறைந்துவிடும் அபாயம் ஏற்படும்.

டோக்கியோ சீமெந்து குழுமம், Linnaeus University, Save Our Seas Foundation, Shark Conservation Fund, Marine Conservation and Action Fund of the New England Aquarium, and Ocean Park Conservation Foundation Hong Kong ஆகியவற்றின் ஆதரவுடன் ஒன்பது வருட கால ஆய்வொன்று *Blue Resources Trust* இனால் முன்னெடுக்கப்பட்டது. இதில் இலங்கையைச் சூழ காணப்படும் ஆனைத்திருக்கை, கொம்பு திருக்கை போன்ற மீன் இனங்கள் நலிவடைந்து வருகின்றமை கண்டறியப்பட்டிருந்தது.

> **மீன்களின் சஞ்சாரத்தில் வீழ்ச்சி காணப்படுகின்றமையினூடாக, இந்து சமுத்திரத்தில் அளவுக்கதிகமாக மீன்பிடித்தல் உயிரினங்கள் குறைவடைதல் போன்றவற்றை வெளிப்படுத்துகின்றன**

கரையோர மற்றும் மீன்பிடி படகுகளால் இவை பெருமளவில் செவுள் வலைகள் கொண்டு (*gillnets*) பிடிக்கப்படுகின்றன. இது முறைசாராத மீன்பிடி செயற்பாடு என்பதுடன், இலக்கு வைக்கப்படும் மீன் இனங்களான (*tuna, sailfish*) போன்ற தவிர்ந்த, ஏனைய கடல்வாழ் உயிரினங்களான ஆமைகள், செடாசீன், இதர சுறாக்கள், திருக்கைகள் போன்றவற்றையும் ஆனைத்திருக்கை, கொம்பு திருக்கை இனங்களையும் பிடிக்கின்றன.

> **ஒன்பது வருட கால ஆய்வொன்று Blue Resources Trust இனால் முன்னெடுக்கப்பட்டது. இதில் ஆனைத்திருக்கை, கொம்பு திருக்கை போன்ற மீன் இனங்கள் நலிவடைந்து வருகின்றமை கண்டறியப்பட்டிருந்தது**

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட 38 பகுதிகளில், 2010 ஆம் ஆண்டு தசாப்த காலத்தின் முற்பகுதியில் வருடாந்தம் 100,000 க்கும் அதிகமானவை பிடிக்கப்பட்டதாக கண்டறியப்பட்டிருந்தது. 50,000க்கும் அதிகமான படகுகள் நாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், 21 தேசிய துறைமுகங்களில் 10 இலும், 883 சிறிய கரையேறல் பகுதிகளில் 28 மாத்திரமே ஆய்வுக்குட்படுத்தப்பட்டிருந்தன. வருடாந்தம் பிடிக்கப்படும் ஆனைத்திருக்கை, கொம்பு திருக்கை மீன்களின் எண்ணிக்கை இதை விட அதிகமாக இருக்கக்கூடும். இதனூடாக உலகில் அதிகளவு ஆனைத்திருக்கை, கொம்பு திருக்கை மீன்பிடி இடம்பெறும் நாடாக இலங்கையை திகழச் செய்துள்ளது.

2010 ஆம் ஆண்டு முதல், மீன்பிடி படகுகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு காணப்பட்ட போதிலும், இந்த வகை மீன்களின் சஞ்சாரத்தில் வீழ்ச்சியை அவதானிக்க முடிந்தது. உயிரினங்கள் சிறிய அளவில் காணப்படுகின்றமையினூடாக, இந்து சமுத்திரத்தில் அளவுக்கதிகமாக மீன்பிடித்தல் மற்றும் இந்த வகை உயிரினங்கள் குறைவடைதல் போன்றவற்றை வெளிப்படுத்துகின்றன.

இறுதியாக, அண்மையில் பிடிக்கப்பட்ட உயிரினங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் போது, அவை இனப்பெருக்கம் செய்யும் அளவை விட, அதிகளவு பிடிக்கப்படுகின்றமை கண்டறியப்பட்டிருந்தது.

பிடிக்கப்பட்ட ஒரு தொகுதி கொம்புத் திருக்கை மீன்கள், முறையான நிர்வாகமின்றி இந்த வகை மீன்களை பிடிப்பது நிலைபேறாண்மையை சீர்குலைக்கும்.

முறையான திட்டமிடல் முகாமைத்துவ இடையீடு ஏற்படுத்தப்படாவிடின், இந்து சமுத்திரத்தில் காணப்படும் ஆனைத்திருக்கை, கொம்பு திருக்கை போன்ற மீன் இனங்கள் அழிந்துவிடும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளன.

2014 ஆம் ஆண்டு முதல் இந்த வகையான உயிரினங்கள் *Conservation of Migratory Species of Wild Animals (CMS)* இனால் முழுமையாக பாதுகாக்கப்படுவதுடன், (1990 ஆம் ஆண்டு முதல் இலங்கை CMS இல் அங்கத்துவம் பெற்றுள்ளது). 2022 ஜனவரி மாதம் முதல் தொழிற்றுறை அல்லது சிறு மீனவர் படகுகளால் பிடிக்கப்பட்டால், இந்த வகை மீன்கள் மீண்டும் விடுவிக்கப்பட வேண்டும் என்பதை *Indian Ocean Tuna Commission (IOTC)* வலியுறுத்தியுள்ளது. (1994 ஆம் ஆண்டு முதல் IOTC இல் இலங்கை அங்கம் வகிக்கின்றது).

இந்த வகை மீனினங்களை பாதுகாப்பதற்கு இலங்கை உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். விழிப்புணர்வு நடவடிக்கைகள், மீண்டும் விடுவிப்பதை ஊக்குவிக்கும் வழிகாட்டல்கள், அதிகளவு நிலைபேறான மீன்பிடி தொழில்நுட்பங்களுக்கு மாற்றமடைவதற்கான ஆதரவு போன்றன அத்தியாவசியமானதாக அமைந்திருக்கும்.

கடலில் காணப்படும் ஏனைய மீன்களைப் போல இல்லாததால், சுறா, திருக்கை மீன்களை முறையாக நிர்வகிப்பது மிகவும் முக்கியமானதாகும். இவற்றை இழப்பதால், எமது கடல் உயிரியல் பரம்பல் பாதிக்கப்படக்கூடும் என்பதுடன், நாடு முழுவதையும் சேர்ந்த கடற்றொழிலில் ஈடுபடும் சமூகத்தாரின் வாழ்வாதாரத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தும்.







### புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினருக்கு

# புதிய வீடு

**பாதுகாப்புப் பதவி நிலை பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் ஷவேந்திர சில்வா, புதன்கிழமை (03) யாழ். பாதுகாப்பு படைத் தலைமையகத்துக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்த போது, யாழ்ப்பாணம், சுன்னாகம் பகுதியில் வசிக்கும் விடுதலை புலிகள் அமைப்பின் முன்னாள் போராளி ஒருவருக்காக 51ஆவது படைப்பிரிவு தலைமையகத்தால் நிர்மாணிக்கப்படவுள்ள புதிய வீட்டுக்கான அடிக்கல்லை நாட்டிவைத்தார்.**





யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நன்கொடையாளரான தியாகேந்திரன் வாமதேவனின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் இத்திட்டமானது, 51ஆவது படைப் பிரிவின் 10 ஆவது இலங்கை பீரங்கி படையணியின் சிப்பாய்களின் தொழில்நுட்பம், பொறியியல் நிபுணத்துவ உதவியுடன் யாழ். பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் 51 ஆவது படைப்பிரிவு தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விக்கிரமசிங்கவின் மேற்பார்வையின் கீழ் முன்னெடுக்கப்பட உள்ளது.

மேற்படி, சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த விடுதலை புலிகள் அமைப்பின் முன்னாள் போராளி, புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டவர் என்பதோடு, 24 ஜூன் 2021 அன்று ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டார். இருப்பினும், அவரது பெற்றோர் உயிருடன் இல்லாத காரணத்தால், அவரது ஒரே சகோதரியுடன் தற்காலிமான இருப்பிடமொன்றில் வசிக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகியிருந்தார்.

இது தொடர்பில், யாழ். பாதுகாப்பு படைத் தலைமையக தளபதி மேஜர் ஜெனரல் ஜகத் கொடிதுவக்குக்கு அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து, 51ஆவது படைப்பிரிவின் கீழ் வீட்டின் நிர்மாணப் பணிகளை ஆரம்பிப்பதற்கான அனைத்து வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டன.

> **“அநாதரவான குடும்பங்களுக்காக 45 புதிய வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. மேலும் நான்கு புதிய வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன**

> **“முன்னாள் போராளிகளுக்கான எதிர்கால தேவைகளுக்காகவும் வாழ்வாதார உதவிகள் அவசியப்படுகின்ற வேளைகளிலும் தன்னை தொடர்பு கொள்ளுமாறு தளபதி அறிவுறுத்தியிருந்தார்**

கடந்த ஜூன் மாதம், ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்ட முன்னாள் போராளிகள் குழுவுடன் ஜெனரல் ஷவேந்திர சில்வா யாழ்ப்பாணத்தில் நடத்திய உரையாடலின் விளைவாகவே, இந்த வீடு நிர்மாணத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு இருந்ததோடு, மேற்படி சந்திப்பு இடம்பெற்ற வேளையில், முன்னாள் போராளிகளுக்கான எதிர்கால தேவைகளுக்காகவும் வாழ்வாதார உதவிகள் அவசியப்படுகின்ற வேளைகளிலும் தன்னை தொடர்பு கொள்ளுமாறு தளபதி அறிவுறுத்தியிருந்தார்.

அதற்கமை புனர்வாழ்வளிக்கப்பட்ட பயனாளி, தனக்கும் தனது சகோதரிக்கும் சொந்த வீடு இல்லாததால் வாழ்வாதார உதவிக்காக இராணுவத்திடம் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

கடந்த 4 ஆண்டுகளில் (2018 - 2021) 51ஆவது பிரிவின் தலைமைத்தால் இப்பகுதியில் உள்ள அநாதரவான குடும்பங்களுக்காக 45 புதிய வீடுகள் நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் நான்கு புதிய வீடுகள் படைப் பிரிவு தளபதி, பிரிகேட் தளபதிகள், கட்டளை அதிகாரிகளின் மேற்பார்வையின் கீழ் இன்னும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

-இராணுவ தலைமையக ஊடகப் பணிப்பகம்










# மாற்றம் காணா மலையகம்





ர. பிரஷாஹினி

நான்காம் வருடம், ஊடக கற்கைகள் துறை, யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

‘என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில், ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்’? இது யாருக்குப் பொருந்துமோ இல்லையோ, மலையக மக்களுக்கு அதிகம் பொருந்தும். காலாகாலமாக காலங்கள் ஓடிக் கொண்டிருக்கிறதே தவிர, காட்சிகள் மாறவில்லை. தேயிலைச் செடியை நம்பி, பிழைப்பு தேடி வந்த மக்கள் நிலை, இன்றைக்கு வரைக்கும் அச்செடிக்குள் சிக்கிக் கொண்டு, சின்னா பின்னமாகி விட்டது.

தேயிலை மலைக் காட்டுக்குள் காலை முதல் கஷ்டப்பட்டாலும் கூட, புகழ்ந்து சொல்லும் அளவுக்கு அவர்களின் வாழ்க்கையில் ஒன்றும் இல்லை. இன்றைக்கு இருபது கிலோ கிராம் கொழுந்து பறித்தால் மாத்திரமே, ஆயிரம் ரூபாய். எத்தனை போராட்டங்கள் நிறைந்த வாழ்க்கை இது. தன் குடும்ப வாழ்க்கையைக் கொண்டு நடத்தப் போதுமான வருமானமின்மையால், இன்றைக்கு அதிகமானோர் வெளிநாடுகளை நோக்கிப் பயணமாகிவிட்டனர்.

குடும்பச் செலவுகளை சமாளிக்கவும் பிள்ளைகளின் படிப்பு கெட்டுவிடக் கூடாது என்பதற்காகவும், தன்னை வருத்திக்கொண்டாவது குடும்பத்துக்குப் பணம் அனுப்பி விட வேண்டும் என்ற எண்ணம் மட்டுமே, அதிகமானோரை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தை நோக்கிச் செல்ல வைத்துள்ளது.

எத்தனையோ குடும்பங்களில் ஆண், பெண் என எத்தனையோ பேர் வெளிநாடுகளில் வீட்டு வேலை செய்தும், சிறு சிறு வேலைகளை செய்தும் உழைத்துக் கொண்டிருக்கின்றனர். வெளிநாடு சென்று வந்த பின்னர், அது கொடுக்கும் ஆடம்பர வாழ்க்கையும் அதனால் ஏற்படுகின்ற தாக்கங்களும் பலருக்குத் தெரிய வாய்ப்பில்லை.

குறிப்பாக, சில தாய்மார், கைக்குழந்தைகளை தாத்தா, பாட்டியிடம் விட்டு செல்கின்றனர். அனுப்புகின்ற பணம் எல்லாம், கணவனின் குடிக்குச் செலவாகி போகின்ற போது, பேரப்பிள்ளைகளை வளர்க்கின்ற பொறுப்புகள் அனேகமாக தாத்தா, பாட்டியின் தலையில் விழுந்து விடுகின்றது.

சமத்துவம் பற்றிப் பேசுகின்ற நாம், ஒருவரை மாத்திரமே குற்றம்சாட்டி விடமுடியாது. தன் குடும்பத்தின் எதிர்கால விளக்கை ஏற்ற மெழுகாய் உருகி, வெளிநாட்டில் வேலை செய்கின்ற ஆண்களும் உண்டு. ஆனால், அவர்களின் மனைவி தன் பிள்ளைகளை விட்டுவிட்டு,



இன்னொருவருடன் சென்று விட்டாள் என்ற செய்திகளும் அவ்வப்போது பேசப்படுவது உண்டு.

குடும்பத்தின் ஏழ்மையை விரட்ட, நாடு விட்டு நாடு சென்று என்ன பயன்? வறுமையோடு சேர்த்து, குடும்பச் சிதைவுகளும் இணைந்துகொண்டன. அதிகமான வளமிக்க மலையகம் வயல்களும் தேயிலைச் செடிகளும் இறப்பர் காடுகளும் என அந்த ஸ்பரிசத்தை சொல்ல வார்த்தைகள் இல்லை.

வெளிநாட்டு வேலைகள், குடும்பத்தைத் தலைதூக்கி விட்டதை விட, குடும்ப வன்முறைகள், குடும்பத்தில் பிளவுகள், பிள்ளைகளின் எதிர்கால கனவு சிதைவுகள் என அடுக்கடுக்கான கஷ்டங்களை கொண்டு சேர்த்துவிட்டன.

சுற்றுலா பயணிகளை அதிகம் ஈர்க்கும் மலையகத்தின் வளம், மலையகத்தவர்களை ஏனோ ஈர்ப்பதில்லை போலும். மலையகத்தில் வளங்கள் அதிகம் இருந்தும்கூட, இன்று அவை மலையகத்தவருக்கு சொந்தமில்லையே!

இது இவ்வாறிருக்க, இன்றைக்கு அதிகளவிலான மதுபானசாலைகள் இருக்கும் இடமாக மலையகம் மாறிவிட்டது. அண்மையில் கூட, மதுபானசாலைகள் திறக்கப்பட்டதை தொடர்ந்து ஹட்டன் நகரில், மதுபான கடைகளுக்கு முன்னால் கூடிய கூட்டம் பற்றிய செய்திகளே ஊடகங்களில் தலைப்புச் செய்திகளாகின.

கொரோனா வைரஸ் பரவல் காலப்பகுதிகளில், விலைவாசி உச்சத்தைத் தொட, மலையகப் பகுதிகளில் மதுபான விற்பனை ஒருபக்கம் அமோகமாக நடக்கிறது. அன்றாடம், அட்டை பூச்சிகளுக்கு இரத்தத்தை உணவாக்கி வாங்கிய அரை நாள் சம்பளம், தினந்தினம் மதுபானசாலைகளில் செலவாகிவிடுகின்றது. குடும்பத்தின் வறுமையும் பிள்ளைகள் பட்டினி கிடப்பார்கள் என்ற பொறுப்புணர்வையும், போதை உணர்வு முழுமையாக அழித்து விடுகின்றது.

குடித்துவிட்டு வரும் கணவனை சமாளித்துக்கொண்டும், இன்றைக்கும் ஈரப்பலாக்காய் கறி தானா? என விம்மிக் கொண்டும் இருக்கும் பிள்ளைகளை சமாதானம் செய்து கொண்டும் கடந்து போகின்றன மலையக மக்களின் வாழ்க்கை.

ஆரம்ப காலங்களை விடவும், பல்கலைக்கழகங்களுக்கு மலையகத்திலிருந்து தெரிவாகும் எண்ணிக்கையில் மாற்றம் ஏற்பட்டாலும் கூட, விரல் விட்டு எண்ணக்கூடிய பட்டதாரிகளே உள்ளனர். காலங்கள் ஓடினாலும் கூட, கல்வி நிலை பற்றிய உணர்திறன் சற்று குறைவாகவே உள்ளது. மலையகத்தில் பெரும்பாலான பாடசாலைகளில் கற்றல் வசதிகளும் வளங்களும் குறைபாடாகவே அமைந்துள்ளன.

பாடசாலை வயதிலேயே குடும்பச் சுமைகள் அதிகரிப்பதன் காரணமாக, பாடசாலை கல்வியை இடைநிறுத்தி விட்டு, கொழும்பு நோக்கிப் படையெடுக்கும் மலையகத்தின் பல ஆளுமைகள், கொழும்பின் புடவைக் கடைகளுக்குள்ளும் செட்டிவீதியின் நகைக்கடைகளுக்குள்ளும் புதைந்து விடுகின்றன.

படிக்கின்ற வயதிலேயே பிள்ளைகளை வேலைக்கு அனுப்பிவிட்டு, இந்த ஊரடங்கு நேரங்களில் பிள்ளைகள் என்ன செய்வார்களோ என பெற்றவர்கள் அனுபவித்த பரிதவிப்பு சொல்லில் அடங்காதவை.

ஆர்வத்தோடு கல்வி கற்க, பாடசாலை சென்றாலும் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறையாலும் மாணவர்களுக்கு போதுமான வசதி இன்மையாலும் இன்றைக்கு கல்வியும் மலையக மாணவர்களுக்கு எட்டாக்கனியாகி விடுமோ என்ற அச்சம் மறுபுறம் தோன்ற ஆரம்பித்துள்ளது.

பாடசாலைகளைப் பொறுத்தவரையில், மலையக மாணவர்களின் அதியுயர் தெளிவாக இருப்பது கலைத்துறை ஆகும். திறமை இருந்தும் கூட, ஏனைய துறைகளுக்கான போதிய வளம் இன்மையாலும், படிப்புக்கு பக்கத்து ஊருக்கு பல மைல் தூரம் கடந்து செல்ல வேண்டும் என்பதாலும் தன் கனவுகளை மாற்றிக் கொண்டவர்கள் இங்கு ஏராளம். “ஒரு கோடி ரூபாய் கிடைத்தால் என்ன செய்வீர்கள்” என்று கேட்ட போது, “நூலகம் கட்டுவேன்” என்கிறார் காந்தி. ஆனால், பெரும்பாலான மலையகப் பிரதேசங்களில் மாணவர்களுக்கென நூலகம் என்ற ஒன்று காணப்படுவதில்லை.

எத்தனையோ திறமையானவர்கள் மலையகம் மண்ணில் இருந்தாலும் கூட, மலையகத்தவர்கள் என்ற புறக்கணிப்பின் காரணமாக அந்த திறமைகள் அனைத்தும் மண்ணுக்குள் மறைந்து கிடக்கின்றன. அதிகளவிலான வெளிநாட்டவர்களை ஈர்த்துத்துவிடும் மலையகத்தின் இன்னொரு பக்கம் மறைந்து விட்டதா, மறைக்கப்பட்டு விட்டதா? என்பது கேள்விக்குறியே! செயல்கள் மூலமான மாற்றத்துக்காக, எழுத்தின் மூலமாக மாற்றத்தை கொண்டு வருவோம்; இன்றும் மாற்றம் காணாத மலையகத்துக்காக!





விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் சனிக்கிழமை, 06 நவம்பர் 2021, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.